விலை ரூபா 15.00

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

18-01-2009

மலர்: 133 இதழ்: 01 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street Po. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021- 222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633


## அப்பாவி மக்கள்மீது நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி யாழ் ஆயர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

**வன்னிப்பிரதேசத்தில் இடம் பெயர்ந்து குறுகிய நிலப்பரப்புக்குள் செறிந்து வாழும் மக்கள்மீது நடத்தப்படும் விமானக் குண்டுத்தாக் குதல்களை உடனடியாக நிறுத்தும்படி யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஜனாதிபதியிடம் அவசர வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். யாழ் ஆயர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் முழு விபரங்களை இங்கே தருகிறோம்.**

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே!

சென்ற மாதம் 31ம் திகதியும் இம்மாதம் 1ம் திகதியும் பரந்தனை அண்மித்த ஏ35 வீதியில் அமைந்த முரசுமோட்டையில் பொதுமக்கள் குடியிருப்பின்மீது வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 31ம் திகதி நாலு பேர் ஸ்தலத்திலேயே இறந்தனர். மேலும் பதினெட்டு பேர் படுகாயமுற்றனர். மீண்டும் 1ம் திகதி மூன்று தடவைகள் காலையும் மாலையும் விமான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் ஒரு பெண் உட்பட ஐந்து பொது மக்கள் பலியாகியுள்ளனர். இருபத்தெட்டு பேர் காயமுற்றுள்ளனர். இக்குண்டுகள் பிரதான வீதியிலும் வீழ்ந்து வெடித்துள்ளன. இச்செய்திகளை ஊடகங்கள் வாயிலாகவும், மின்னஞ்சல் வழியாகவும் அனைவரும் அறியக் கூடியதாகவுள்ளது.

எனவே அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி பணிவுடன் வேண்டுகின்றேன்.

முல்லைத்தீவு கிளிநொச்சி பிரதேசங்களிலுள்ள இரண்டரை இலட்சம் மக்கள் வன்னிப்பிரதேசத்தின் சிறுபகுதிக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். இவ் வேளையில் இவர்கள் மீது விமானக் குண்டுத்தாக்குதலகளை நடத்துவது மிகவும் மோசமான செயற்பாடாகும். இனி மேலாவது பொதுமக்கள் குடியிருப்புக்கள்மீது வான்தாக்குதல்களை தவிர்த்துக்கொள்ள வேண்டுகின்றோம். அமைதியை வருவிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து, பேச்சுவார்த்தையை ஆரம்பித்து அமைதியை நிலைநாட்ட வேண்டுகின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ் ஆயர்.**

இயேசுவில் இணைந்த திருச்சபையாக பிறரன்புப் பணிசெய்வோம்

## யாழ் மறைமாவட்ட புதுப்பித்தல் திட்டத்தின் மூன்றாம் ஆண்டுத் திட்ட செயற்பாடுகளுக்கு ஒத்துழையுங்கள்

**மறைமாவட்ட ஆணையங்களுக்கும், இறைமக்களுக்கும் ஆயர் அழைப்பு**

யாழ் மறைமாவட்டத்தின் புதுப்பித்தல் நிகழ்வுகளை முன்னெடுக்கும் வழிமுறைகளை ஆராயும் முகமாக அண்மையில் ஆயர் தலைமையிலான கூட்டமொன்று யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இவ் ஆலோசனைக் கூட்டத்தில் குரு முதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் இத்திட்டத்தை செயற்படுத்த முன்னின்று செயற்படும் குருக்களும் கலந்து கொண்டார்கள்.

இதுவரை நடைபெற்ற செயற்பாடுகள் பற்றிய குறைநிறைகள் ஆராயப்பட்ட பின்னர், புதிய ஆண்டுக்கான திட்டம் முன்வைக்கப்பட்டு அதனை முன்னெடுக்கும் செயற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டது. இதற்கான தனது ஆலோசனைகளை முன்வைத்த ஆயர் அவர்கள இச்செயற்பாடுகள் பலன் கொடுக்க வேண்டுமென்றால் மறை மாவட்டத்தின் எல்லா ஆணையங்களும் தங்கள் தங்கள் பணிகளினூடாக ஒத்துழைக்க வேண்டும் என்றும கேட்டுக் கொண்டார். இது பற்றி ஆராய்வதற்காக எல்லா ஆணையங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கூட்டமொன்றை வருகிற பெப்ரவரி மாதம் 9ம் திகதி நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஆயர் அவர்கள் குரு முதல்வரைக் கேட்டுக்கொண்டார்.

**(இவ்வாண்டுத்திட்டம் பற்றி அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகளின் கருத்தை 'எமது எண்ணத்திலும்', செயற்பாடுகள பற்றி 8ம் பக்கத்திலும் காணலாம்)**

## வாசிக்கும், எழுதும் பழக்கத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் அமரர் கிருபானந்தன் அடிகள்

**- *இறை தொடுவானம்* நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ் ஆயர் -**

அமரர் அருட்பணி. சா. பி. கிருபானந்தன் அடிகளின் மறைவின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி, அடிகளாரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக தயாரிக்கப்பட்ட *இறை தொடுவானம்* என்னும் நூல் வெளியீடு கடந்த 05-01-2009 திங்கட்கிழமையன்று புனித வளன் கத்தோலிக்க அச்சக பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ஆசியுரை வழங்கிய யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் அமரர் கிருபானந்தன் அடிகள் தனது இயலாமையிலும் பயனுள்ள நூல்களை வாசிப்பதிலும், பல கருத்தாழமிக்க ஆக்கங்களை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார் என்றும், இவருடைய இந்த முன்மாதிரிகையை தற்கால இளம் குருக்கள் துறவியர் பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றின் ஏற்பாட்டில், அதன் தலைவர் அருட்பணி. ஞா. பிலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை அருட்பணி. போல் றொகான் அடிகளும், நயப்புரையை அருட்பணி. அ.பி. யெயசேகரம் அடிகளும் நிகழ்த்தினார்கள்.

## *உறவில் வளர்வோம்*

### அன்பிய எழுச்சிப்பாடல்கள் வெளியீடு

திரு. கெனத் அவர்களின் இசை உருவாக்கத்தில், ஆத்ம இராக வெளியீடாக *உறவில் வளர்வோம்* என்னும் இறுவட்டு ஒலி நாடா அண்மையில் வெளியிடப்பட்டது. அன்பிய வாழ்வின் பண்புகளை தாங்கிய பாடல்களை தாங்கியுள்ள இவ் ஒலிநாடாவின் பாடல்வரிகள் அருட்பணி. இரவிசந்திரன், அருட்பணி. றொபின்சன், திரு. கெனத் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளன. அன்பிய ஒன்றுகூடல்களில் இலகுவாக எல்லாராலும் பாடப்படக் கூடிய வகையில் இதன் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்ட இவ் இறுவட்டு ஒலிநாடவை அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகள் ஆய்வு செய்தார்.

இவ் இறுவட்டை மறைக் கல்வி நிலைய அன்பிய தொடர்பகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒன்றின் விலை : ரூபா 100 மட்டுமே.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரம் : ஜனவரி 18 — 25

**இவ்வாண்டிற்கான கருப்பொருள் : "அவை என் கையில் ஒரே கோலாய் இருக்கும்." எசேக்கியேல் 37: 15-19, 22-24a**

**"ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது: மானிடா! நீ ஒரு கோலை எடுத்துக் கொள். அதில் 'யூதாவுக்கும் அவனோடு சேர்ந்தருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் உரியது' என்று எழுது. பின்னர் இன்னொருகோலை எடுத்து அதில் 'யோசேப்புக்கும் அவனோடு சேர்ந்த இஸ்ராயேல் வீட்டார் அனைவருக்கும் உரிய எப்பிராயீமின் கோல் என்று எழுது'. அவை இரண்டும் உன் கையில் ஒரே கோலாயிருக்கும்படி, அவற்றை ஒன்றாகச்சேர். உன் மக்களினத்தார் உன்னிடம், 'இவற்றால் என்ன சுட்டிக்காட்ட விழைகிறீர்?' எனக் கேட்கையில், அவர்களுக்குச் சொல்: தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே:**

**நான் எப்பிராயீமின் கையிலிருக்கும் யோசேப்பு மற்றும் அதனுடன் சேர்ந்த இஸ்ராயேல் குலங்களின் கோலை எடுத்து அதை யூதாவின் கோலுடன் சேர்த்து அவற்றை ஒரே கோலாய் மாற்றுவேன். அவை என் கையில் ஒரே கோலாய் இருக்கும்.**

**இஸ்ராயேலின் மலைகள்மீது அவர்களை ஒரே நாட்டினர் ஆக்குவேன். அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசன் இருப்பான். அவர்கள் இனிமேல் ஒருபோதும் தங்கள் தெய்வச் சிலைகளாலோ இழிந்த அருவருப்பான பொருள்களாலோ தங்கள் வேறெந்தக் குற்றங்களாலோ தங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பாவம் செய்த எல்லாக் குடியிருப்புகளிலிருந்தும் அவர்களை நான் மீட்டுத் தூய்மையாக்குவேன். அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பர். நான் அவர்களுக்கு கடவுளாய் இருப்பேன். என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பான்."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர் விழித்திருப்பது வீணாகும்

## புதிய சமுதாயம் நோக்கி...

இயேசுக் கிறிஸ்துவிலே நம்பிக்கை கொண்டோரின் சமுதாயத்தில் நாங்கள் அவரது அழைப்பிற்கேற்ப புதிய சமுதாயம் படைக்கப் புறப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்பிக்கை கொண்டோர்கள் ஒன்று சேர்ந்து நம் அயல்பட்டவர்களாக வாழ அழைக்கப் படுகின்றனர். அவர்கள் தமது தலைவனின் வழியில் புதிய சமுதாயம் படைக்க புறப்பட வேண்டியவர்கள். இதனால்தான் இந்த புதுப்பித்தலுக்கான மூன்றாவது ஆண்டிலே நாங்கள் எமது சமுதாயத்தை நோக்கி எமது பார்வையை பரவிட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சர்வதேச, தேசிய, உள்ளூர் அரசியல், பொருளாதார, சமூக காரணிகளால் இன்று எமது சமூகம் பிளவுண்டு, சிதைவுண்டு போயிருக்கிறது. அனுப்பப்பட்ட திருச்சபையினராகிய நாமோ இந்த போர்களையும், அவற்றின் சாதக பாதக நன்மைகளையும் பற்றிய சிந்தனை விழிப்புணர்வும் இல்லாதவர்களாக இருக்கின்றோம். ஒரு விதத்தில் ஒதுங்கி இறைவேண்டலிலும், வழிபாடுகளிலும் மூழ்கி முதைத்து வெளியாடம்பரங்களில் மயங்கி உண்மைகளை தரிசனம் கொண்றும் பயமற்று வாழ்கின்றோம்.

இந்த நிலையிலேதான் எமக்காக இவ்வாண்டுப் புதுப்பித்தல் அமைப்பு மிகவும் பொருத்தமாக எடுக்கப்படுகிறது. எமது சமுதாய நிலைபற்றிய விழிப்புணர்வை எமது குழுமங்களுக்கும் தனி நபர்களுக்கும் ஏற்படுத்துவதும், ஆண்டவர் இயேசு முன் மொழிந்த இறையாட்சி என்னும் மாற்றுச் சமுதாயத்தின் தன்மைகளை புரிந்து கொள்வதும், அத்தகைய சமூகம் ஒன்றை உருவாக்கப் புறப்படுவதும் நாம் செய்ய வேண்டிய அவரது பணிகளாகும்.

இறைவார்த்தையும், திருச்சபையின் சமூகப் போதனைகளும் எமக்கான பயணத் திசையை செவ்வனே காட்டி நிற்கின்றன. அவற்றை அறிந்து தெளிவதும் எமது சமூகத்திலே அவற்றின் பொருத்தப்பாட்டை தேர்ந்து தெளிவதும் முக்கியமானது. இவ்வாறு ஏற்படும் அடித்தளச் சமூக விழிப்பிலேதான் இறையாட்சி மலரும். இத்தகைய நோக்கோடு இவ்வாண்டிலே புதுப்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க அனைவரும் முன்வருவோம்.

எமது மறைமாவட்டத்திற்கான ஐந்து ஆண்டு புதுப்பித்தல் செயற் திட்டத்தின் மூன்றாம் ஆண்டிலே நுழைகின்றோம். எமது இந்த ஐந்து ஆண்டு புதுப்பித்தல் முயற்சி ஒரு மலர் மலர்வது போல, நான், நாம், எமது சமூகம் என்ற வரிசையில் படிப்படியாக மலர்ந்து வருகின்றது. ஐந்து ஆண்டின் நடுமையமாக வரும் இந்த மூன்றாம் ஆண்டு புதுப்பித்தலுக்கு மிகவும் முக்கியமானது. தன்நோக்கு கொண்ட மனிதர்களாகவும், திருச்சபையாகவும் வாழ்ந்து வரும் நாம் சமூகம் நோக்கி எமது பார்வையை திருப்புவதை இவ்வாண்டு தனது இலக்காக கொண்டுள்ளது. அந்த வகையில் இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே எமது புதுப்பித்தல் பயணத்தை முழு மூச்சோடு ஆரம்பிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

### எனது நம்பிக்கை

முதலாவது ஆண்டிலே நாம் எம் ஒவ்வொருவரதும், தனிப்பட்ட நம்பிக்கையை சீர்தூக்கிப் பார்த்தோம். தூய பவுல் அடிகளார் "ஆண்டவரே நீர் யார்?" என்ற வினாவெழுப்பி தனது நம்பிக்கைப் பயணத்தை தொடர்ந்தது போல நாமும் இயேசுக் கிறிஸ்து எமக்கு யார்? என்ற வினாவை எழுப்பி அவரை அதிகம் அறிந்து கொள்ளவும் அன்பு செய்யவும் அவருக்கான எமது அர்ப்பணத்தை ஆழப்படுத்தவும் அவரோடான உறவில் வளரவும் முனைந்து நின்றோம்.

### நம்பிக்கைச் சமூகம்

இரண்டாம் ஆண்டிலே இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட மனிதர்களின் உறவில் தோன்றும் திருச்சபையிலே கவனம் செலுத்தினோம். நம்பிக்கை கொண்டோர் தம்மிடையே நட்புறவில் நிலைத்திருந்தனர் என்று திருத்தூதர் பணி சொல்வது போல கூட்டுறவுச் சமூகங்களாக நம்பிக்கை கொண்டோராகிய நாம் வாழ்வதற்கு முயன்றோம். ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வு முறையை அடியொற்றி சமகாலத்திலே கிறிஸ்தவ குழும வாழ்வை வாழ முனைவதும் அன்பிய இயக்கத்தை எமது மறைமாவட்டத்தில் கட்டியெழுப்ப முயன்று நம்பிக்கைச் சமூகமாக உயர்வடைய முனைந்தோம். பல்வேறு பங்குகளிலும் அன்பியக் குழுமங்கள் உருவாக்கப்பட்டு அவை இயங்கி வருகின்றன. இவ்வாண்டிலும் இப்பணி தொடர இருக்கிறது. அவைகளினதும் நிக்கலுறுப்பும், செபமும் இதற்குத் தேவை.

**அருட்பணி. எம்.வி.கி. இரவிச்சந்திரன்**

# ஓர் எறும்பின் சுறுசுறுப்புடன்

### அமரர் கிருபானந்தன் அடிகள் நினைவாக...



ஒரு
பகலின் வெளிச்சம்
போன்று
தோன்றி மறைந்து விட்டதோ
இந்த
ஒரு காலப் பிரசவம்

அறிவின்
மூலதனத்தில்
இயல்பாய் எழும்
அகங்காரம்
அகற்றிய
இவன்
எளிமை......

அகலச் சிந்திப்பில்
உலகப் போக்குகளை
தோலுரித்து
சிரிப்பை உதிரும்
இவன் முதிர்ச்சி..........

தேடல் மிகுந்த
காதலால்
வந்த
கடும் உழைப்பின்
முனைப்பு.....
இவை
தொடுவானைத் தொடும்
பயணமாகப் புறப்பட்டன
இவனில்,

இங்கே
அறிவுச் சலனமற்ற
ஆத்மார்த்த
பணியாளனாய்
நீடிய ஆயுளோடு
புதைந்து கிடக்கிறான்
பணித்தளக் கல்வெட்டுக்களில்

எறும்பின்
சுறுசுறுப்போடு
ஆறாவது அறிவை
தன் பணியில் சேர்த்துக் கொண்ட
செழியவர்.
கனமகன்ற
ஆன்மீக எளிமையை
அறிவித்தவன்.
சுயம் சுமந்தவரையும்
நினைவில்
சுமந்தவன்
இந்த
மனிதன்

பின்
இறக்கைகளற்ற
பறவையாய் ஆனபின்னும்
பாம்பின் உந்தலை
வகுபடாத
சாம்பலில் மீண்டெழுந்த
புதிய
பீனிக்ஸ் பறவை
இவன்

சில
சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டன
முளையில்

கத்தியால்
இவன் புத்தியைப்
பரிசோதிக்கவோ?

சிலுவைகளைச் சுமந்தபோதும்
உன் சிரிப்பின் மொட்டவிழும்
வார்த்தைத் தெரிவுகள்
உன் நினைவை
எம்மில்
ஈரமாக்குமே!

ஆர்வமுள்ள பணியாளன்
பாதி வழியில்
அணைந்து போனான்
ஆயினும்
'இயேசுவின் சிலுவையை
பொறுப்புடன் அணைத்தபடி'
என்ற நம்பிக்கை
இவனில்
பெறுப்பெறும்

**- அருட்பணி. அருட்செல்வன் -**

# வள(னா)ர் பப்பா பதில்கள்



**1. கேள்வி** : அன்புள்ள வள(னா)ர் பப்பா! உங்கள் பெயரின் இரகசியம்தான் என்ன?
மதி, யாழ்ப்பாணம்.

**பதில்** : உஷ்...... அதுதான் இரகசியமாச்சே!

**2. கேள்வி** : அன்புள்ள பப்பாவுக்கு! திருப்பலிக்குச் செல்லும் போதும் செல்போன் எடுத்துச் செல்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
சுமன், கொய்யாத்தோட்டம்.

**பதில்** : அவர்கள் தொலைத்தொடர்பு பக்தர்கள். தொலைபேசி இன்று தொல்லைபேசி ஆகிவிட்ட நிலையில் "உங்கள் தொல்லைகளை கடவுளிடம் எடுத்துச் சொல்லுங்கள்" என்பதற்கேற்ப இதை எடுத்துச் செல்லுகிறார்கள் போலும். தயவு செய்து செல்போனை செல்லாத போனாக்குங்கப்பா. (கோயிலுக்கு எடுத்துச் செல்லாத )

**3. கேள்வி** : அன்புள்ள வளனாரே! இப்போது மாணவர்கள் பலர் கல்வியில் ஆர்வம் குறைந்துள்ளனரே ஏன்?
கபிலா, கொழும்புத்துறை.

**பதில்** : தொலைக்காட்சி நாடகங்களை விரும்பிப் பார்த்தும் பாடப்புத்தகங்களை விரும்பாமல் பார்த்ததாலும் இந்நிலை ஏற்படுகிறது. செல்வியா? கல்வியா? என்ற குழப்பத்தில் இருந்தால் படிப்பில் ஆர்வம் குறைவது உறுதிதான்.

**4 கேள்வி** : அன்புள்ள பப்பா.
பிரணாப் முகர்ஜியின் வருகை அமைதியை ஏற்படுத்துமா?
நாதன், நாவாந்துறை.

**பதில்** : இப்படியொரு கேள்வியைக் கேட்டு ஏன் என் அமைதியை கெடுக்கிறீர்? அவர் வருகையே பெரும் திண்டாட்டத்தில இருக்கிறதே!

**5. கேள்வி** : பப்பா ஒரு கடியோக் சொல்லுங்களேன் ? கே: உங்களை பாப்பாண்டவராக தெரிவு செய்தால் என்ன செய்வீர்கள் பப்பா?

**பதில்** : முதலில் கொழும்புக்கு போக Clearence எடுப்பேன் ஹி ஹி ஹி......

**6. கேள்வி** : பொருளை அறிய மொழியுண்டு அருளை உணர ஆன்மீகம் உண்டு. அதுபோல மனித இதயத்தை எதன் மூலம் அறியலாம்.
பாலன்சேவியர், அல்லைப்பிட்டி - 3

**பதில்** : இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை. அது கண்டுபிடிக்கப்படுவதை யாரும் விரும்பப்போவதுமில்லை.

**7. கேள்வி** : சமுதாயம் உதவாக்கரை என்று ஒதுக்கும் மனிதனை ஆன்மீகம் என்ன கண்ணோட்டத்தோடு பார்க்கிறது.

**பதில்** : சமுதாயமே அதுவாக இருக்கும் போது அது எப்படி மனிதனை போய்...? ஆன்மீகம் என்பது என்ன என்பதற்கு சரியான புரிதல் வேண்டும். பொறுப்பெடுத்துக் கொள்ளலே ஆன்மீகம் (taking responsibility). அப்படியானால் எவரையும் ஒதுக்கிவிட முடியாது. 99 ஆடுகளையும் பாழ்வெளியில் விட்டு விட்டு ஓர் ஆட்டைத் தேடிச் சென்ற உவமையை மீண்டும் வாசிப்போமா?

**8. கேள்வி** : வன்னி மக்களின் எதிர்காலம்?
மரியதாசன், அளவெட்டி.

**பதில்** : வன்னி மக்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்குமுன் அவர்களின் நிகழ்காலம் கேள்விக்குறியாகவுள்ளதே. அங்கு எழுந்துள்ள மனிதப் பேரவலத்திற்கு "தலைமைகளே" காரணம் என்பதால், அத்தலைவர்களின் மனங்கள் கரைய கடவுள் கருணைக்கு மன்றாடும்.

**9. கேள்வி** : யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கள் காட்சியைப் பார்த்தீர்களா?
மரியதாசன், அளவெட்டி

**பதில்** : இக்கேள்வியில் மறைந்துள்ள பின்னணி புரிகிறது. "கண்காட்சி பார்ப்பதற்குத்தான் என்றாலும் கண் கட்டப்பட்ட நிலையில் காட்சி பார்த்தவர்களை நான் பார்த்தேன். பரிதாபம்தான்.

**குறிப்பு** : மதி, உமது ரகசியக் கேள்விக்கு என் பரகசியப் பதில்.
வளனார் - சூசையப்பர்
இவர் இயேசுவின் வளர்ப்பு அப்பா அதுவே வளனாப்பா என்று ஒலிக்கிறது பாதுகாவலன் பணிமனையும் இவர் பெயரிலே தானப்பா. உங்கள் கேள்விக்கு பதில் தருபவரும் இவர் தானப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜே.ஏ. அருள்தாசன்

## பொதுக்காலம் 2ம் ஞாயிறு

"உம் திருவுளம் நிறைவேற்ற, இறைவா! வருகிறேன். உம் அருள் வாக்கைப் பறைசாற்ற என்னையே தருகிறேன்".

"யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார். அருகலிருந்த இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தனர். (யோவா 1: 36-37)

ஒவ்வொரு மனிதனின் அடிமனதிலும், ஆயிரமாயிரம் ஆசைகள், விருப்பங்கள், கருத்துக்கள், தேவைகள் நிறைவேறாமலே உண்டு. அவை நிறைவேறும்போது அம்மனிதன் உள்ளம் மகிழ்கிறான், உள்ளத்தில் நிறைவையும், திருப்தியையும் உணர்கிறான். ஆயினும் அனைத்திலும் மேலாக இறைவன் மட்டிலாக்குள்ள திட்டம் எம்மில் நிறைவேற நாம் எம்மையே முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதிலேயே எமது கிறிஸ்தவ வாழ்வு முழுமையும், நிறைவும் அடைகிறது.

சுங்கச் சாவடியில் வரி வசூலித்துச் செல்வம் பெருக்கி வாழ்வதில் மனநிறைவுகண்ட லேவி, இயேசுவின் அழைப்பை மேலான அருட்கொடையெனக் கொண்டு இயேசுவின் சீடரானார்.

மீன்பிடித் தொழிலில் உளப்பூரிப்புக்கொண்ட பேதுரு, இயேசுவின் அழைப்புக்கேட்டு அனைத்தையும் விட்டு இயேசுவைப் பின்பற்றுவதே பெறற்கரிய பேறாகக் கொண்டு இயேசுவின் தலைமைத் திருத்தூதரானார்.

இறைமகன் இயேசுவும் தன் விருப்பமல்ல, இறைதந்தையின் திருவுளமே நம்மில் நிறைவேறட்டும் என்று, மிகக் கொடிய வேதனையும், துயரும் நிறைந்த சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டார்.

"அப்பா, தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், ஆனாலும் என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்". (மாற் 14:38) என்று வேண்டினார்.

இவையெல்லாம் எமக்கு வாழ்க்கைப்பாடமாக அமைய வேண்டிய முன்னுதாரணமான சான்றுகளாக அமைந்துள்ளன. நமது சின்னஞ்சிறு ஆசைகள், நோக்குகள், தேவைகளையெல்லாம் இறைவனிடம் பட்டியலிட்டு மீண்டும், மீண்டும் உச்சரித்து கேட்பதுதான் செபமென்ற போலியான மனப்பாங்கில் வாழ்பவர்கள் ஏராளம்.

எனது தனிப்பட்ட விருப்பங்களாயின் எனக்கென இறைவனிடம் உள்ள திருவுளமே நிறைவேற வேண்டுமென்பதை தன் இலக்காகக் கொண்டிருப்பவர் வாழ்வில் சோர்வடையார், மாறாக அவர் தம் வாழ்வில் வலிமையடைவார். "இறைவா நான் என்ன செய்யவேண்டுமென நீர் விரும்புகிறீரோ அதுவே நிகழட்டும்" என்ற தன்மையில் வீணான அச்சம், ஏக்கம், அங்கலாய்ப்பு இன்றிச் சஞ்சலமின்றி வாழும் மனநிலையை வளர்த்துக்கொள்பவரே தன் வாழ்வில் முழுமையையும் நிறைவையும், பேரானந்தத்தையும், அர்த்தத்தையும் கண்ட பேறானவர் ஆவார்.

"அப்போது ஆண்டவர் வந்து நின்று, 'சாமுவேல், சாமுவேல்' என்று முன்புபோல் அழைத்தார். அதற்குச் சாமுவேல், 'பேசும்' 'உம் அடியான் கேட்கிறேன்' என்று மறுமொழி கூறினான். சாமுவேல் வளர்ந்தான்; ஆண்டவர் அவரோடு இருந்தார்...." (1 சாமு 3: 10,19) சாமுவேலிடம் இருந்த இறைவனுக்கு செவிசாய்த்து, அதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் மனநிலையால் சாமுவேலோடு இறைவன் இருந்தார். அவர் வளர்ந்தார், இதனால் சாமுவேல் இஸ்ராயேல் வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பு மிக்க தலைவராகத் துலங்கினார்.

இயேசு தான் உலகின் பாவங்களுக்குக் கழுவாயாகத் தன்னைப் பலியிடவந்த "கடவுளின் ஆட்டுக்குட்டி"யெனச் சுட்டிக் காட்டுவதே, இறைவன் தனக்கு வகுத்த திட்டமென்பதை உள்ளூர உணர்ந்த யோவான் அவரைச் சுட்டிக் காட்டி ஏனையோரை இயேசுவிடம் கொண்டு சேர்த்தார்.

நாமும் நமது சமுதாயத்தில் கிறிஸ்துவைச் சுமந்து செல்லும் உத்தமராக வாழ்வதே இறைவன் நம்மில் வைத்துள்ள திட்டம் என்பதை உள்ளூர உணர்ந்து வஞ்சம் தீர்க்கும் நெஞ்சம் மறுத்து, அன்புறவை வளர்க்கும் ஆவல் கொண்டு, துன்பத்தையும் துணிவுடன் எதிர்கொள்ள இறை நம்பிக்கையை ஆழப்படுத்தி வாழ எம்மைப்பயிற்றுவோம்.

## பொதுக்காலம் 3ம் ஞாயிறு

"என் மனதினை உமக்குகந்ததாய் மாற்றிடும் என் இறைவா! "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அவர் கூறினார்". (மாற் 1:15)

தோற்றத்திற்கு உட்படும் அனைத்துமே, அன்றாடம் மாற்றத்திற்கு உட்பட்டுச் செல்கின்றன. மாற்றம் ஒன்றே இவ்வுலகில் நிலையானதும், வெளிப்படையானதுமாகத் தென்படுகிறது.

வெளிப்படையான செயற்பாடுகள், மற்றும், நடை, உடை பாவனையில் மாற்றத்தைக் காண்பிக்கின்ற மனிதன், மாற்றம் காண வேண்டிய, பக்குவப்பட வேண்டிய தன் உள்ளங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதவனாக அல்லது அதன் பொருட்டு நெருக்கடிக்கு உட்படுபவனாக இருப்பது வெள்ளிடைமலையாக உள்ளது.

இறைவனைப் பற்றிக் கொள்வதே மனமாற்றத்தின், மையமாகவும், தத்துவமாகவும் அமைகின்றது. ஆயினும் இறைவனைப் பற்றிக் கொள்ள இவ் உலகின் தோற்றப்பாடுகளின் மாயைகளான செல்வங்கள் மற்றும் போலி உறவுகளாகக் பெரும் தடைகளாகப் பல சந்தர்ப்பங்களில் அமைந்து விடுகின்றன.

ஆகவே மனமாற்றம் என்பது இவ்வுலக பற்றுதலில் இருந்து விடுபட்டு இறைவனை பற்றுவதாகும். அதாவது இவ்வுலகின் அரசின் பிடியிலிருந்து விடுபட்டு விண்ணக அரசை பற்றி வாழ்வதாகும்.

மனம்மாறி வாழும்போது நாம் இறையாட்சிக்கு உட்படுகிறோம் அதே போல இறையாட்சிக்கு உட்படும் போது மனமாற்றம் காணுகின்றோம்

மனமாற்றம் என்பது தனி மனிதன் என்ற வரையறையை கடந்து அரசியல், சமுதாய, பொருளாதார சூழலையே உருமாற்றும் பெரும் சக்தியாக உருவெடுக்கும் போது அதுவே இறையாட்சியின் உயர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது.

ஆறடி நிலத்தில் சங்கமமாகும் ஆடி அடங்கும் இவ்வுலக வாழ்க்கையிலே மனிதன் தேடிய செல்வம் வெறுமை ஒன்றே. அதுவே நிஜம். "உலகச்செல்வத்தை பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர் போல இருக்கட்டும். இவ்வுலகு இப்போது இருப்பது போல் நெடுநாள் இராது."(1 கொரி 7 : 31)

இறைவன் ஒருவரே நிலையானவர். நிலையான நித்திய இறைவனின் இறையாட்சிக்கு உட்பட்டு அதற்கு உருக்கொடுக்க நற்செய்தியை நம்புவதே நிலையான பேறுடைமையும் சிறந்த மார்க்கமுமாகும்.

இறைவாக்கினரான யோனாவின் இறைவாக்கைக் கேட்ட நினிவே நகரினர் தம் பாவ வாழ்வை விட்டுத் தபம் செய்து தம் மனமாற்றத்தை எண்பித்தார்கள்.

புதிய ஏற்பாட்டு யோனாவாக இயேசுக்கிறிஸ்துவும் கலிலேயாவில் திருமுழுக்கு யோவான் கைது செய்யப்பட்டபின் அவரின் பணியின் தொடர்ச்சியாக மனமாற்றத்திற்காக அழைப்பு விடுத்தார். இவ் வழியில் அவரின் அழைப்பை ஏற்று சீமோன் அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகியோர் அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவைப் பின் சென்றனர். அன்றே அவர்கள் இறையாட்சியின் மைந்தர்கள் ஆயினர்.

யோனாவின் செய்தியை ஏற்று விடுதலை பெற்ற நினிவே மக்கள் கூட்டம் போல இயேசுவின் அழைப்பைக் கேட்டு அவர் வழி பின்பற்றி சென்ற திருத்தூதர் போல, இயேசுவின் சீடராக கிறிஸ்தவராக வாழும் அழைப்பை பெற்ற நாம் ஒவ்வொருவரும் ஒரே நிலையான நித்திய செல்வமாகிய கிறிஸ்துவை என்றும் ஆதாரமாக்கி கொள்ள உறுதி கொள்வோம். போலியான பேச்சு, பொய்யான வேடம் அறவே அழித்து உள்ளதை உள்ளபடியே ஏற்று, கிறிஸ்து இயேசுவுக்கே வாழ்வில் முதலிடம் கொடுத்து உண்மையின் சாட்சிகளாய் இன்றே வாழ்வோம்.

## இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்தவர் முத். யோசெவ் வாஸ் அடிகளாரே!

அருட்சகோ. [illegible]

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக கீழைத் தேசங்களுக்கு வர்த்தக நோக்கில் பயணித்த ஐரோப்பியர்கள், தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் தாம் பின்பற்றிய மதத்தை கட்டியெழுப்பத் தவறவில்லை. முதன் முதலாக இலங்கைக்கு வருகை தந்த போத்துக்கேயர் இலங்கையின் கரையோரப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு கிறிஸ்துவை அறிவித்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தி, திருமுழுக்குக் கொடுத்து இலங்கையில் திருச்சபை வேரூன்ற வழிசமைத்தார்கள். ஆனால் காலக்கிரமத்தில் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த ஒல்லாந்தர்கள் கத்தோலிக்கத்தை வேரோடு அகற்றி, புரட்டஸ்தாந்து மதத்தை பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இதனால் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டார்கள். கத்தோலிக்க குருக்கள் கடும் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டு [illegible] நாட்டைவிட்டு துரத்தப்பட்டார்கள். இதனால் கத்தோலிக்க விசுவாசத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள விரும்பிய கிறிஸ்தவர்கள் பலர் அடர்ந்த காட்டுப் பிரதேசங்களில் குடியேறினர். சிலர் நகரத்துள்ளே மறைவாக தமது விசுவாசத்தில் உறுதியாக இருந்தனர். பல ஆண்டுகளாக குருக்கள் எவரினதும் வழிகாட்டல்கள் இல்லாமல்

# காவலன் கண்மணிகள்

## புனித செபஸ்தியார்



கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு படைவீரர். அரசனுடைய தீமையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் மரத்தில் கட்டப்பட்டு அம்பினால் எய்யப்பட்டார். ஆனால் இறக்கவில்லை. தொடர்ந்தும் அரசனுக்கு கீழ்ப்படிய மறுத்ததால் கி.பி. 288ல் அடித்துக் கொல்லப்பட்டார்.

## உன் வாழ்க்கைக்கு அர்த்தம் தேட

- சிந்தனையை புதிதாக்கு எதிர்காலம் உன் கையில்
- உன்னை நீ அறிந்தால் உயரும் உன் மதிப்பு
- மனதை அடக்க நினைப்பதை விட அதை அறிய முயற்சிப்பதே மேல்
- தோல்வியை கண்டு அஞ்சி உன் திறமையை அழித்து விடாதே
- சிரிக்க நேரம் ஒதுக்கு! அது ஆத்மாவின் ராகம்
- அன்பினால் சேவை செய்! அதுவே இறைவனின் ஆலயம்
- உன் உள்ளத்தின் மனச்சாட்சியே உனக்கு உண்மையான நீதிபதி
- விழிப்பதற்கே உறக்கம், வெல்வதற்கே தோல்வி, எழுவதற்கே வீழ்ச்சி.
- கடவுளுடன் பேச வேண்டுமானால் அவருடன் தனித்து வாழ்வதை நீ நேசிக்க வேண்டும்.
- உயிரோடு உள்ளவர்களுக்கு உதவு, உன் உதவி இவர்களுக்கே தேவை.

இ. தர்சினி
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்

## காவலன் கண்மணிகள் அறிமுகம்



| | | |
|---|---|---|
| பங்கு | : | சற்கோட்டை |
| முழுப்பெயர் | : | உலகராசா சோபனா |
| பாடசாலை | : | யா/ அல்வாய் வடக்கு றோ.க.த பாடசாலை |
| விலாசம் | : | நாச்சிமார் கோவிலடி, அல்வாய் வடமேற்கு, அல்வாய் திக்கம் |
| வயது | : | 14 |
| தரம் | : | 09 |
| பிறந்த ஆண்டு | : | 1994 -12 -12 |

## வைரவரிகள்

[ ஒரு மாணவனுக்கு உரிய வைரவரிகள் ]

★ மௌனமாய் இருக்காதே. உலகம் உன்னை ஊமையாக்கி விடும்.

★ உரிமையை ஒரு போதும் இழக்காதே. அதற்காக உனது உயிரையே தியாகம் செய்.

★ தடைகள் ஆயிரம் தான் வந்தாலும் உன இலட்சிய நடையை ஒரு போதும் நிறுத்தாதே.

★ தேசத்தை நேசி அது உன்னை நேசிக்கும்.

★ சாதனைகள் படைக்க வேண்டுமென்றால் சோதனைக்கு முகம் கொடு.

- உ. சோபனா

## பொன்மொழிகள்

(மனித வாழ்க்கைக்கு உகந்த பொன் மொழிகள்)

- மன்னிக்க துணிந்த மனிதன் உள்ளம் ஒரு மாசில்லா மாணிக்கக் கோயில்.
- அன்பு வழி நடக்கும் மனிதன் வாழ்வில், என்றும் உண்மை மலரும்.
- என்னதான் சிரித்து வாழ்ந்தாலும் பிறர் சிரிக்க வாழ்வது குற்றம்.
- உண்மை அன்பு ஒன்றே மனித வாழ்வில் என்றும் நிலையாக இருக்கும்.
- அரண்மனையின் அறுசுவையை விட குடிசை வாழ் ஏழை உயர்ந்தவன்

- உ. சோபனா



| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | : | றஞ்சன் சுரேதன் |
| விலாசம் | : | நெடுந்தீவு மத்தி, 10ம் வட்டாரம், சூசையப்பர் வீதி நெடுந்தீவு. |
| பிறந்த திகதி | : | 1997 – 11 – 11 |
| கல்வித்தரம் | : | தரம் 6 |
| பாடசாலை | : | யா/ நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயம் |
| பொழுது போக்கு | : | பாடம் சம்பந்தமான நூல்களை வாசித்தல். |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தூய பவுல் ஆண்டின் சிறப்புப் பகுதி



## தூய பவுலின் திருமுகங்களுக்கோர் பின்னணி

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகம் S. அன்ரனிப்பிள்ளை, மறை ஆசிரியர்

தொடர்ச்சி...

### வேதனைமடல்

2ம் கொரிந்தியர் திருமுகத்தில் ( 12 : 4 : 13 : 1- 2 ) திருத்தூதர் மூன்றாம் முறையாக கொரிந்து சபையைச் சந்திக்க போவதாக எழுது கிறார் அவருடைய முதல் பயணம் திருத்தூதர் பணியில் இடம்பெறுகின்றது (18:1-17) அங்கு சென்ற தூய பவுலுக்கு அறுதலும், ஆதரவும் கிடைக்கவில்லை கொரிந்து நகர இறைமக்கள் பவுலோடு சேரவோ, அவருக்குச் சார்பாகப் பேசவோ, எதிரிகளை எதிர்க்கவோ, தயங்கினர். அந்த அளவுக்கு போலிப் போதகர்கள் கொரிந்தியர்களை மயக்கிவிட்டிருந்தனர். ( 11 : 4 )

இந்நிலையைத்தானே கண் கூடாகக் கண்ட தூய பவுல் தொடர்ந்து நகரில் தங்கியிருக்க மனமின்றி மிகுந்த வேதனையோடும், மனக்கவலையோடும், கலங்கிய கண்களோடும், (2:4) வெளியேறினார். மீண்டும் அவர்களை சந்திக்கவிருந்த திட்டத்தைக் கைவிட்டார். திரும்பவும் சென்றால் பகை வளரும் என்று எண்ணியதாலும் கொரிந்தியர் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று நினைத்ததாலும் அவர் அங்கு செல்லவில்லை. இது கோழைத்தனமென்றும், நிலையற்றதனமென்றும் எடை போட்டனர். கொரிந்தியர்கள் பவுல் தான் சொல்லும் வாக்கைக் காப்பாற்ற முடியாத மன உறுதியற்றவர் என்று அவர் மேல் குற்றம் சாட்டினர்.

எபேசுக்கு திரும்பிய திருத்தூதர் மிகக்கடுமையான கடிதமொன்று கொரிந்தி சபைக்கு எழுதினார். (2: 4) கிறிஸ்துவில் ஈன்றெடுத்த அன்புக் குழந்தைகளிடத்தில் கடுமையாக நடந்து கொள்வது தகப்பனுக்கு எவ்வாறு வேதனையளித்திருக்கும். இயேசுவினால் நேரடியாக அழைக்கப்பட்டு அனுப்பப்பட்ட திருத்தூதரை அவர்கள் ஏற்றுக் கொண்டு மதிக்கத் தவறிவிட்டனர் இவ்வாறு அவர்கள் நடந்து கொண்ட செயலானது இயேசுவுக்கே செய்த மிகவும் அவமானச் செயலாகும்.

எனவே வேதனையுடன் எழுதிய மடலை தமது துணையாளரும் தீவிரபணியாளருமாகிய தீத்துவின் வழியாக கொரிந்து சபைக்கு அனுப்பினார். இம் மடல் புதிய ஏற்பாட்டிலோ, வேறு எந்த தொகுப்பிலோ இடம்பெற வில்லை என்பது பேருரையாளரின் கருத்து.

கொரிந்து நகருக்கு தீத்துவை அச்சலொடு அனுப்பிய பின் தூய பவுல் திருப்தியடையவில்லை. அமைதியிழந்தவராய் அச்சலில் அடங்கியிருந்த தன் உணர்வலைகளை எத்தகைய கண்ணோட்டத்துடன் காண்பார்களோ என்ற ஏக்கம். அதுமாத்திரமல்ல தீத்துவுக்கு எப்படிப்பட்ட வரவேற்பு அளிப்பார்களோ என்ற அச்சம் மேலிட்டவராய் பவுலின் உள்ளம் தவிக்கவே, தீத்து செய்தியுடன் எபேசுநகருக்கு திரும்பும் முன்பே அங்கிருந்தவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தரை வழியாக மக்கதோனியாவுக்கு புறப்பட்டார். ( 2 : 13 ). செல்லும் வழியிலேயே துரோவாவில் தம்பி தீத்துவைச் சந்திக்க முடியும் என்றும் எண்ணம் அவருக்கு உதித்தது அத்துடன் அந்நகரில் ஆண்டவருடைய நற்செய்தியை அறிவிக்கவும் விருப்பம் கொண்டார்.

துரோவாவை அடைந்தும் தம்பி தீத்துவைத் தேடினார். அவரை அங்கு காணாததால் பவுலின் உள்ளம் அமைதியின்றி தவித்தது. ஆண்டவருக்கு பணியாற்ற அவருக்கு நல்ல வாய்ப்பு இருந்தும் அதை விடுத்து உடனே அங்கிருந்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தீத்துவைத் தேடி மக்கதோனியாவுக்கு புறப்பட்டார். ( 2 : 12 – 13 )

4) கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம் — ஏன்?

கொரிந்து நகரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த தீத்துவை தூயபவுல் மக்கெதோனியாவில் சந்தித்தார். தம்பியின் வருகையும் அவர் கொணர்ந்த செய்தியும் பவுலுக்கு மகிழ்ச்சியை அளித்தன.

1. கொரிந்து சபை தீத்துவுக்கு நல்ல வரவேற்பு அளித்தது 7:7
2. திருத்தூதர் வேதனையுடன் எழுதிய கடுமையான கடிதம் கொரிந்தும் சபையினரை புண்படுத்தியிருந்தாலும், அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து மனந்திரும்புவதற்கு கருவியாக இருந்தது என்று தீத்து கூறினார். ( 7 : 7 – 8 ).
3. பவுல் கொரிந்து நகருக்கு சென்றிருந்த போது அவரை வெளிப்படையாக எதிர்த்து, அவமானப்படுத்தியவனை கொரிந்து சபை தண்டிக்க முடிவு செய்துள்ளது என்பதை அறிந்தார். தொடரும்...

## யார் இந்தப் பவுல்?


யூதரின் எண்ணமோ
மீட்பெல்லாம் அவர்க்கென்று
ஆண்டவன் சித்தமோ
அனைவர்க்கும் மீட்பென்று
சிலுவையில் அறையுண்டு
அவர்பட்ட சிறுமைகள்
அனைவருக்கும் மீட்பாக
அகிலத்தில் மாறிற்று.
நிலவென்ன ஒருவர்க்கா
காய்கின்ற வருகுது?
பரிதியும் குறிப்பிட்ட
சிலருக்காய் ஒளிருதா?
மழை என்ன அகிலத்தில்
சிலருக்காய் கொட்டுதா?
காற்றென்ன சிலருக்காய்
சாமரம் வீசுதா?
இயற்கையே அனைவர்க்கும்
பொதுவாக இருக்கையில்
ஆண்டவன் அருள் என்ன
சிலருக்கா கிடைத்திடும்?
உலகின் வாழ் அனைவரும்
அவர் சாயல் அறிவீரோ
அவர் தானே அனைவர்க்கும்
அன்பான தந்தையாம்
இதை விட்டு பிறருக்கு
மீட்பில்லை எனச் சொன்னால்
என்னாலே சகித்திடல்
முடியுமோ வையத்தில்
அதனாலே புறசாதி
மக்களை மாற்றிட
ஆசியா கண்டமதில்
ஆர்வமாய் அலைந்தேனே.
யான் பட்ட கஸ்ரங்கள்
வீண்போகவில்லையே

தனிப்பட்ட பணிக்காக
ஆண்டவன் என்னையே
ஒதுக்கியே வைத்ததும்
என் பெரும் பேறாகும்.
புற இனத்தாரிடையே
அவர் திருப்பெயரினை
சாற்றிட என்னையும்
கருவியாய் ஆக்கினார்.
பர்னபா என் உடன்
பணியாளன் ஆகவே
பாரெங்கும் யேசுவின்
போதனை பகர்ந்தனம்
உரோமையில் கொரிந்தியில்
கலாத்தியில் எபேசுவில்
பிலிப்பியில் கொலோசையில்
இறைபணி செய்தனம்
தெசலோனி திமோத்தேயில்
தீத்துவில் எபிரேயம்
தனியே எங்கும் சென்றுமே
சாட்சியம் ஆகியோம்.
நற்செய்திப் பணி என்னில்
சுமத்தியே விடப்பட்ட
பணி என்று எண்ணியே
நானிதை செய்தனன்
நானிதை செய்திலை
என்றாகி விட்டாலே
ஐயையோ எனக்குற்ற
கேடென்று எண்ணினேன்
ஆகையினால் அன்றோ
நற்செய்தி போதிப்போர்
பாதமே அழகென்று
அன்று நான் பகர்ந்தனன்.

(இன்னும் பேசுவேன்)

ம. யேசுதாசன், மறை ஆசிரியர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி – 11



### [ 1 , 2 திமொத்தேயு ]

15 சபைகளை நன்முறையில் நடத்துபவர்கள் வலமிருந்து இடமாக உள்ளார்கள்.
17 போதுமிருத்தல் இது நல்லது என்பர். இறுதி நாளுக்கு இது அவசியம் (இது வலமிருந்து இடமாக உள்ளது )
17 இது கூறக்கூடாது, ஆனால் இறுதி நாளில் இப்படிப் பட்டோர் தோன்றுவார்.
18 சிங்கத்தின் இதில் நின்று என்னை விடுவித்தார் என தூய பவுல் கூறுகிறார். ( வலமிருந்து இடமாக உள்ளது. )

### இடமிருந்து வலம்

1. இதைநாம் போடக் கூடாது.எமது விசுவாசம் இப்படி இருக்க வேண்டும்.
3. இது ஆபத்தான ஆயுதம். இது இரட்டை தன்மை கொண்டதாக இருக்கக்கூடாது
4. இப்படி இருப்பது நல்லதல்ல, ஆகையால் திருமணத்தை தடை செய்பவர் பொய்யர்களை தூயபவுல் கண்டிக்கிறார்.
5. தூய பவுலால் திமோத்தேயுவுக்கு இறை அருள் இது போலக் கிடைத்தது.
6. விவாகரத்தை தூய பவுல் இதற்கு ஒப்பிடுகிறார்.
8. இதனால் விளைவது துன்பமே. திருச்சபைப் பணியாளருக்கு இது கூடாது.
10 இவர்களை தம்பிகளாக பேணும்படி தூய பவுல் அறிவுறுத்துகிறார்.
11 தலைமைத்துவம் தாங்குபவருக்கு இது அவசியம் என்று தூய பவுலின் போதனையின் சாரம் அமைகின்றது. (வலமிருந்து இடமாக)
12 இயேசு எனதுதூதர்க்கு இப்படி ஆனார்
13 இது அறிவைக் கெடுக்கும் என்பார். இது அமைதிக் கெதிரானது.
16 இந்த பண்புடையவர்கள் இதனால் பதி இழந்து கடவுள் படைத்த அனைத்தும் நல்லதே என ஏற்க மறுக்கின்றனர். (இதில் புணர்ச்சி விடுபட்டுள்ளது.)

### மேலிருந்து கீழ்

1. திருச்சட்டம் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவோருக் காகவே இயற்றப்பட்டதென்று தூய பவுல் கூறுகிறார்.
2. இவர்களை மாண்புடன் மதிக்க வேண்டும். இவர்களை கொல்பவரும் உளர்.
5. உதவி செய்வோர் இருப்பின் கைம்பெண்களின் இதை திருச்சபை மேல் சுமத்தக் கூடாதென்று தூய பவுல் கூறுகிறார்.
7. கடவுள் அனைத்தையும் நல்லதென்றே இப்படிச் செய்துள்ளார்.
9. வாழும் கடவுளே சிறப்பாக நம்பிக்கை கொண்டோருக்கு இப்படியானவர்.
10. இக்காலம் போல்லாதது, பலர் ஏமாறுவர்.
13. இதையறியாமல் கால் வைக்கக்கூடாது. தீமையில் உழல்வோர் அதன் இதை அறியாமல் வீழ்ந்து விடுகின்றனர். (இது கீழிருந்து மேலாக)
13. குரங்கிறதும் இதற்கும் தொடர்புண்டு. பாவமும் எமக்கு இப்படி பட்டது தான்.
14. விசுவாசத்தை விட்டு நாம் விலகாதிருக்க இது வேண்டும்.
15. இதில் நாம் சிக்கக்கூடாது. சோதனையும் நமக்கு இப்படிப்பட்டது தான் ( கீழிருந்து மேலாக உள்ளது.)
16. இவர்கள் மதிக்கப்பட்ட வேண்டியவர்கள். பலர் இவர்களை மிதிக்கிறார்கள். (கீழிருந்து மேல்)
18. தூய பவுல் ஓடிமுடித்தார் இதனைப் பெற்றார். (இது கீழிருந்து மேலாக உள்ளது.)

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி :- 31.01.2009

## அன்புள்ள பிலமோனுக்கு

பவுலது திருமுகம்
பலருக்கு அறிமுகம்
கவிதனில் மறைமுகம்
கற்பதில் பெருமிதம்
வைபிளின் தனித்துவம்
வாழ்க்கையின் புத்தகம்

தந்தையின் வார்த்தை தனை
தங்கமாய் எடுத்துரைத்து
தரணியெங்கும் முரசொலித்த
தந்தையார் சரித்திரம்

சிறந்த பணிக்காக
சிறையிலே அறையுண்டு
சிறைக்கூட மடலாக
சோதரத்தை சுட்டிநிற்கும்
பிலமோனுக்கு எழுதிய
பிரியமான பத்திரம்

" கொலோசை மாநகரில்
கொழுத்த விட்ட செல்வந்தன்
பிலமோனின் ஆதிக்கத்தின்
பிடியிலிருந்து தப்பினனாம்
அடிமையாம் ஒனேசிம்

பவுலே தஞ்சமென
பத்திரமாய் தப்பி வர
இவனை ஏற்குமாறு
இங்கிதமாய் எழுதுகிறார்
தந்தை கடவுளும்
நாதன் இயேசுவும்
அருளும் அமைதியும்
அன்பருக்கு என்நாளும்
அருளப்பட வாழ்த்துரைத்தார்

இயேசுவிலே நீர் கொண்ட
கடவுள் நம்பிக்கையும்
இறைமக்கள் மீது கொண்ட
இனிதான அன்பினையும்
நண்பன் நான் அறிவேன்

இறைவன் அருட்பொழிவால்
இரண்டறக் கலந்த நாம்
நட்பின் உறவுடனே
நலமதை கேட்பரோ

அனைக்கும் கரங்களோ
அன்போடோர்
வேண்டுகோள்
கண் போன்ற பிள்ளையை
கருவாக ஏற்றுவீர்

அன்றுமக்கு பயனற்ற
ஒனேசிம்
இன்று நமக்கு பயனுள்ள
கனியானான்
கடினமாய் நோக்காதீர் –
மனக
கனிவுடனே ஏற்றிடுவீர்

நற்செய்திப் பணிக்காக
சிறைப்பட்ட நானுமக்கு
இதயத்தை அனுப்புவதாய்
இவனை அங்கு
அனுப்புகிறேன்

மீண்டும் அடிமையாக
அவனை நீர் ஏற்காது
அன்புச் சகோதரனாய்
ஆவலுடன் ஏற்றிடீர்

அவன் உமக்கன்று
இழைத்த இரைப்புகளை
நான் உமக்கின்று
ஈடுசெய்து நிரப்பிடுவேன

ஆண்டவர் நாமத்தால்
அருள் கூர்ந்து ஏற்றுவீர்
வாழ்க்கைக்கு கீழ்ப்படிந்து -
இறை
வழிதனில் சென்றிடுவீர்

கிறிஸ்துவின்
அருளென்றும்
உம்மோடு இருப்பதாக"

நற்செய்தி பணிசெய்த
நாயகன் கவி கேட்டா
விவிலியம் வாசிப்பீர்
விளக்கமாய் அறிந்திடுவீர்

கி.றொக்சன் பிரதீப்
புனித மரியாள் ஒழுங்கை
ஊர்காவற்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்தாஸ்
கியூடெக்
செய்தி மடல்
HUDEC Caritas
யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம்
Tel.ph: 021-2222571, 7314 Fax: 021-2228050 Email: hudec@sltnet.lk Website: www.hudecjaffna.org

# உரிமைகளை கேட்கும் நாம் கடமைகளை செய்தவராகவும் திகழவேண்டும்



கரித்தாஸ் - கியூடெக நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் தினம் 10.12.2008 அன்று ஜெபா மண்டபத்தில் நடைபெற்றது. யாழ் மறை மாவட்டத்தில் உள்ள 60 குழுத்தலைவர்களும் பங்குபற்றினர். இந்நிகழ்வில் உரையாற்றிய சட்டத்தரணி எம்.ரெமிடியஸ் மனித உரிமைகள் ஐ.நா.சபையில் பிரகடனப்படுத்தப்பட்டு 60வது ஆண்டை நினைவுகூரும் தினத்தில் மனித உரிமைகள் எத்தனையோ பலவழிகளில் மறுக்கப்பட்ட நிலையில் எமது உரிமைகளை நாம் பெறுவதில் உள்ள அக்கறை எமது கடமைகளை நாம் செய்வதிலும் அர்ப்பணத்துடன் உழைக்க முன்வரவேண்டும். பிறர் உரிமைகளை மதிப்பதில் நாம் முன் மாதிரிகளாக இருக்கும்போதுதான் எமது உரிமைகளையும் பாதுகாக்க முடியும்.

பெண்களின் உரிமை பாதுகாப்பதில் பெண்களே முன்மாதிரியாக செயல்படவேண்டும். இன்றைய பல சமூக சீர்கேடுகளில் வீட்டு வன்முறையே அதிகரித்து வருகிறது. எமது கலாசார விழுமியங்கள் பேணுவதில் சகல மதங்களிலும் நல்ல விழுமியங்களையே விதைத்துள்ளது. அதனை நடைமுறைப் படுத்தும்போது மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றார். இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் திரு. R.A தவரெட்ணம், திரு.ரி. சந்திரகுமார் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

# புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள்



வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து இருநகர் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 106 பொது மக்களுக்கான மூன்று நேரத்துக்குமான சமைத்த உணவு ஒரு வாரத்துக்கு(22.11.08 – 28.11.08) வழங்கப்பட்டது.

26.11.08 இல் ஏற்பட்ட நிஷா சூறாவளி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் ஆலயங்களில் தங்கி இருந்த கரையோரப் பகுதி மக்களுக்கு பாண், ஜாம் மற்றும் சமைத்த பருப்பு, கடலை போன்ற உணவுகள் 30ம் திகதி வரைக்கும் வழங்கப்பட்டது.

26.11.08 இல் ஏற்பட்ட நிஷா சூறாவளி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து ஆலயங்களில் தங்கி இருந்த தென்மராட்சி வடமராட்சி மக்களுக்கு ஆலய பங்கு குருக்களின் ஊடாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டது.



**வன்னி மக்கள் துயர்களைய எமது செபங்களாலும், நல்மனம் கொண்ட உதவிகளாலும் துயரில் துணைக்கரங்களாவோம்.**

# வாழ்வாதார திட்ட செயற்பாடுகள்





வாழ்வாதார சுயதொழில் வேலைத்திட்டத்தில் பருத்தித்துறை கொடிகாமம், பொலிகண்டியைச் சேர்ந்த 30 மகளிருக்கான சாறி அலங்கார பயிற்சியினைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குனரால் வழங்கப்பட்டது.

## பாடசாலை மாணவர்களுக்கான பாதணி விநியோகம்

| பாடசாலை | மாணவர் தொகை |
|---|---|
| யாழ்.ஸ்ரீமன்காமம் மகா வித்தியாலயம் | 156 |
| யாழ்.காங்கேசன்துறை மகா வித்தியாலயம் | 37 |
| யாழ்.பருத்தித்துறை ஹாட்லி மகா வித்தியாலயம் | 19 |

சுநாமி பயனாளிகளுக்கான உலர் உணவு விநியோகம்

| இல | பிரதேசம் | குடும்பங்கள் |
|---|---|---|
| 1 | தென்மராட்சி | 1555 |

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான தற்காலிக குடியிருப்புக்கள்

| இல | இடம் | வகை | வீடுகள் |
|---|---|---|---|
| 1 | இருபாலை | புதிது | 09 |

# சமாதான செயற்திட்டப் பயிற்சி



கியூடெக் - கரித்தாஸ் சமாதானப் பிரிவால் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடாத்தப்பட்ட மூன்று நாள் வதிவிடப் பயிற்சியில் வளவாளர்களாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்களின் வழிகாட்டலில் 35 பயிற்சியாளர்கள் பங்குபற்றினார்கள். சமாதான எண்ணங்களைத் தூண்டும் பாடல் இறுவெட்டுகளை (CD) வெளியிடுவதற்கான ஆரம்ப முயற்சிக்காக இப்பயிற்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர் திரு.ஏ.ஆர் விஜயன் உரையாற்றுகையில், மக்கள் மனங்களில் நற்சிந்தனைகளை வளர்ப்பதற்கு கவிதைகள், பாடல்கள் சிறந்த பங்களிப்பினை செலுத்தும் கருவியாகவுள்ளது. பல மணித்தியால உரைகளை விட சில நிமிட பாடல் வரிகள் மனதில் பல பதிவுகளை, மாற்றங்களை ஏற்படுத்துவதால் இதனை ஊடகமாக கொண்டு சமாதான சிந்தனை விதைப்போம், வன்முறையற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்றார்.

"துண்டுபட்ட தனிமனிதன் அல்ல ஒன்றுபட்ட மனிதகுலம் முன்னேற வேண்டும்" (பாப்பிறை ஆறாம் சின்னப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒரு கதம்பம்

எஸ் - ஜே- யோகராசா, சிரேஷ்ட விரிவுரையாளர்,
(உளநல ஆலோசகர்)
களனிப்பல்கலைக்கழகம்

( அங்கம் 07 )

## திருமணமும் குடும்பமும்

### திருமணத்தை வளமாக்குதல்

எமது திருமணவாழ்வைச் செழிப்பாக்க, வளமாக்க நாம் கஷ்டப்பட வேண்டும். இன்று பணம் சம்பாதிக்கவும், பெருக்கும் பக்கத்திலே பல பட்டங்களை எழுதவும், புகழ் தேடவும் கஷ்டப்படுகிறோம். ஆனால் குடும்ப உறவை நாம் சக்தியாக்க மிகவும் கஷ்டப்பட வேண்டும்.

(அ) தம்பதியினர் தமது திருமணவாழ்வுக்கு ஒர் குறிக்கோள் எல்லை, தரிசனம் இருக்கின்றது என்பதை உணர்ந்து அதை அறியவேண்டும்.

(ஆ) அக்குறிக்கோள் தரிசனத்தை இருவரும் தம்முடையதாக்கிக் கொண்டு, அதை நோக்கிப் பயணம் செய்ய அர்ப்பணம் செய்யத் தீர்மானம் எடுக்க வேண்டும்.

(இ) காம் இருவரும் எடுக்க தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திறமைகளையும், சூழல்களையும் வளர்ப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

(ஈ) தமது முயற்சி வெற்றியடைய இறைவனது மறைபொருளான வல்லமையைத் தம்மால் பெறமுடியும் என்பதை விசுவசித்தல் வேண்டும்.

கிறிஸ்தவ திருமணத்தைப் பற்றி பரி. வேதாகமத்திலும் இரண்டாவது வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினைகளிலும் கூறப்பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமத்தின்படி திருமணம் என்பது இறைவனது சாயலாகவும், இறைவனுக்குச் சமமானவர்களாகவும் (அன்பு செய்வதில்) வளர்வதற்கான உள்ள அழைப்பாகும். (ஆதி 1:26-27). திருமண உறவை கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டியான பரி. திருச்சபைக்கும் இடையிலுள்ள ஆழமான, அர்ப்பணித்த, பரித்தியாகமுள்ள உறவுடன் ஒப்பிடப்படுத்தப்பட்டுள்ளது. திருமணம் அர்த்தமுள்ள வாழ்வாகும்.

திருமண வாழ்வில் அர்ப்பணத்தைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது திருமணம் முடிக்க நாளில் உடன்படிக்கை (ஒப்பந்தம்) எடுக்க சடங்கில் இருவரும் "ஆம்" என்ற வார்த்தையை உச்சரித்ததன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வேளையில் சுதந்திர விருப்பத்துடன் ஒருவர் ஒருவருக்காகத் தம்மை அர்ப்பணித்ததைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு தமது திருமணத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். "நான் ஏன் திருமணம் முடித்தேன்?" என்ற கேள்விக்கு விடை தேடி, அதற்காக அர்ப்பணித்து, அதை வளர்க்கத் தேவையான ஆழத்தையும், திறமைகளையும் அமைத்துக் கொண்டு வாழ்வது அவர்களது கடமையாகும். இன்று பலரது குடும்ப வாழ்வை நோக்கும்பொழுது இக்கண்ணோட்டத்தோடு, அர்ப்பணத்தோடு செயற்படாததை புரிகின்றது. அதனால் கணவன் மனைவிக்கிடையிலான உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமை அவர்களது வாழ்வில் தெரிகின்றது. முதலாவது பிள்ளை பிறந்ததும் இந்நிலைமை மோசமடைகின்றது.

தமது திருமண வாழ்வுக்குச் சக்தி தேவை என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. திருமணம் முடித்ததும் எல்லாம் முடிந்துவிட்டது என்று பலர் எண்ணுகின்றனர்.

குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு முக்கியமாகின்றது. இதற்கு அதிகமான அவதானம் செலுத்தப்படவேண்டும். குடும்பத்திலுள்ள ஏனைய உறவுகள் இதற்கமையவே ஏற்படுகின்றன. கணவன் மனைவிக்கிடையில் உள்ள உறவை ஆழமாக்க சக்தியாக்க இருவரும், அவர்களது பெற்றோர் சகோதரர்களும் அர்ப்பணித்தால், அது நல்ல பலனைக் கொடுக்கும்.

இருவருக்குமிடையில் தொடர்பு, உறவு சந்திப்பின் மூலம் ஆரம்பிக்கின்றது. அது நேரடியாகவோ, அல்லது தொடர்பு சாதனங்கள் மூலமாகவோ ஏற்படுகின்றது. இவ்வாறு ஆரம்பிக்கும் தொடர்பு, பகிர்ந்து கொள்வதன் மூலமும், கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும் மேலும் ஆழமாகின்றது. தம்பதிகள் தமது உறவை ஆழமாக்குவதற்கு ஒருவர் மற்றவருடன் நல்ல விதத்தில் கருத்துப் பரிமாறுவது எப்படி என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கருத்துப் பரிமாற்றம் பலனுள்ளதாக இருக்க வேண்டுமானால் விரைவாகவும், உண்மையானதாகவும், தெளிவாகவும் சுருக்கமான தொகுப்பாகவும் இருக்க வேண்டும்.

விரைவானதாக இருக்க வேண்டும் என்று கூறியதன் அர்த்தம் என்ன? தனது தனிப்பட்ட அனுபவம், கருத்துக்கள் அபிப்பிராயங்கள், உணர்வுகளை அந்த நேரத்தில் பகிர முடியாமல் போனாலும், கெட்டித்தனமாகவும், பொருத்தமாகவும், மிகவும் விரைவாகப் பகிரவேண்டும். வெளிப்படுத்த வேண்டும். அதற்காக நேரம் ஒதுக்க வேண்டும்.

உண்மையானதாக இருக்க வேண்டும் என்றதன் கருத்து என்ன? முழுமையாக உண்மையானதாக இருக்க வேண்டும். ஓரளவு உண்மையாக, பொய்யாக வெளிப்படுத்துவதைவிட வேறுபட்ட நிலையாகும். கணவன் மனைவிக்கிடையில் பொய்யான வார்த்தைகள் பரிமாறப்படுவதைத் தவிர்க்க வேண்டும். திருமணம் முடிக்கும்பொழுது "பிரமாணிக்கமாக இருப்பேன்" என்று வாக்குறுதி கொடுத்தனர். பெற்றோருக்கும் பிரமாணிக்கமாக இருப்பது போன்று, கணவன் மனைவி ஒருவர் ஒருவருக்கும் பிரமாணிக்கமாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

தெளிவாக இருக்கவேண்டும் என்பதன் அர்த்தம் என்ன?
செய்தியைத் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறவேண்டும். சந்தேகிக்கலான, ஆழமான செய்தியையும் மிகவும் தெளிவாகவும், இலகுவாக விளங்கக்கூடிய விதத்திலும் கூறவேண்டும்.

தொகுத்துக் கூறவேண்டும் என்பதன் கருத்து என்ன?
கவரும் விதத்தில், விரும்பக்கூடிய விதத்தில் சுருக்கமாகக் கூறுவது. குறுக்கு வார்த்தைகளைப் பாவிக்கும் பொழுது சண்டையில் முடிகிறது. ஆகவே தொடங்கிய தலைப்பு மாறி வேறு தலைப்பில் கதைக்காது ஒரு தலைப்பில் தொடங்கினால் அதை முடிக்கும்வரை வேறு தலைப்பில் கதைப்பது நன்று.

திருமணத் தம்பதியினர் நல்ல விதத்தில் தமது கருத்துக்களைப் பரிமாற வேண்டுமானால் அவர்கள் பயிற்சியும், உதவியும் பெற வேண்டும். இப்படிப்பட்ட பயிற்சிகளால் ஒருவர் மற்றவரை எப்படிப்படுத்தும் முறைகளையும் உத்தரவுப் படுத்தும் முறைகளையும் கற்றுக்கொள்ள முடிகிறது. இருவருக்கிடையிலும் ஏற்படும் சண்டை சச்சரவைத் தீர்த்துக்கொள்ளும் முறை பற்றியும், கோபத்தை அடக்கி நிர்வகிப்பது பற்றியும், இதற்குச் சமமான வேறு விடயங்களைப் பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடரும்...

## மறக்க முடியுமா...?

ஆண்டுகள் நான்குதான்
உருண்டோடிச் சென்றாலும்
மறக்க முடியுமா? உன்னை
சுனாமி என்ற அரக்கியே!

மார்கழி இருபத்தாறு
மறக்க முடியாத நாள்
மனுக்குலப் பேரவலமாம்
மரணத்தை தழுவிய நாள்

அதிகாலை வேளை
ஆராதனை கேட்டு
அத்தனை பேரும் திகிலுற்றோம்
அலை ஒன்று எம்மை நோக்கி வந்தது

கண்ணிமைக்கும் நேரத்திலுள்
கடல் வந்து எம்மை தாக்க
கால் இடறி நாம் விழுந்தோம்
கடலில் எம்மை அடித்து சென்றதுவே

என்ன நடக்கிறதென்று
எமக்கு தெரியவில்லை
எங்கு போகின்றோம் என்று
கண்ணைப் பார்க்கவும் முடியவில்லை

நம்மை தேடி வந்த கடல்
நாலைந்து நிமிடத்திலுள்
நடந்த வேண்டிய பாவத்தையும்
நன்றே நிகழ்த்திச் சென்றதுவே

வேகமாக வந்த அலை
வேதனை காட்டி விட்டு
வேதனைத்தீயில் எமை ஆழ்த்தி
வேகமாக திரும்பிச் சென்றதுவே

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உன் வருகை நினைக்காமல்
இருக்க முடியுமா? சொல்லு....?
ஏழைகளின் துயரத்தை இது மறக்க
முடியுமா?

கேள்வி கேட்கும் இவ்வுலகில்
கேலி செய்யும் உலகமா இது...
கேலி கேலி அழுகின்றோம்....
எம் உடன் உறவுகளை நினைத்து நாம்

வெதும்பி நிற்கும் எம் இதயத்திற்கு
வேதனையை துடைத்திடவே
வந்துதித்த பாலகனே நீயும்
துயர் துடைத்திட வாராயா.........

திரு. ப. சங்கர், மல்வம்

## இனியும் தொடருமா?

போர் மேகத்தால் இருண்டிடக்கும் - எங்கள்
புயல் மேகமும் சூழ்ந்ததுவா
சுதையாய்ய வெள்ளத்தில்
தொலைந்து போனது இல்லிடங்கள்

உடல் அலைகள் வீதியில்
கண்டுதான் ஆச்சரியம்
என்ன (பீ) ஏலைகளை வாய்க்கால்
ஓரத்தில் கண்டுதான்
அறுதாபக் காட்சி

நாளாந்தமும் அன்று நானுறுவுதாசிப் போனது
தெரு நாயைப்போல் வீதியில் அலைந்திதோம்
பிறந்தமுழப்பிணோம், மீனாய்ப்போனோம்
திகைத்துப்போட்டோம்

கோயில் ஏரிகள் வசிப்பிடமாகினோம்
திசை தெரியாமல் ஆடையாக்க முடியவில்லை
எத்தனை நாளுக்குத்தான் முகாம் உலவு,
பாடசாலையில் தங்கினால் படிப்பது
- எங்குதான்

பாழான பாரினிலே பாவமானவளே
பிதற்றிக்கும் எம்வாழ்க்கு
பரிகாரம் என்ன உண்டு
வெள்ளம் மற்றும் நிலை தொடருமா?

ப. தக்சி, நாவாந்துறை.

## எதற்காக இத்தனை துன்பங்கள்?

நாம் சற்று எதிர்பாராத நேரத்தில் தான் விருந்தினரை போல் நம் வாழ்வில் துன்பம் தோன்றுகிறது. எம் அனைவரின் வாழ்விலும் துன்பம் என்னும் தீ தீண்டாத ஒரு மனிதனும் இவ்வுலகில் கிடையாது இந்த அக்கினித் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு தான் வாழ்கை இன்பமாக அமைகின்றது துன்பம் தோன்றும் போது தான் மனிதன் இறைவனை நாடுகிறான் "எனக்கு துன்பம் கிடைத்தது நன்மைக்காகவே அதனால் உமது விதி முறைகளை கற்றுக் கொண்டேன்" (திருப்பாடல் 119:71) மகிழ்ச்சியின் நாட்களில் மனிதன் கடவுளை மறந்து விடுகிறான். தனக்கு உடல் ஆரோக்கியத்தையும் செல்வச் சிறப்பையும் அளித்த இறைவனை மறந்து விடுகிறான். இறைவனுக்கு நன்றி கூறாமல் விடுகிறான். இந்நிலையில்தான் சூறாவளியைப் போல் துன்பங்கள் ஏற்படுகின்றன. துன்பங்கள் மனித வாழ்வில் அத்திய அவசியமானவைதான். ஏனென்றால் அப்போது தான் இறைவனைக் குறித்து சிந்திக்கிறான். நானும் இதற்கு விதிவிலக்கல்ல. துன்பங்கள் தான் என்னை இறைவனோடு நல்லுறவு கொள்ளச் செய்தன. இறைவன் நம்மோடு பிரசன்னமாய் இருந்தால், எத்துன்பத்தையும் தைரியமாக எதிர் கொள்ள இயலும். சோதனைகள் மன உறுதியுடன் தாங்குவோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்களின் தகுதி மெய்ப்பிக்கப் படும்போது தம் மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றியினை பெற்றுக் கொள்வோம். என்ற மனநிலையுடன் வாழ்வில் துன்பம் தோன்றும் போது அவை அனைத்தையும் அன்றாடம் நடைபெறும் கல்வாரிப்பலியான திருப் பலியில் சமர்ப்பிப்போம். அப்பாகவரும் யேசுவைப் பெற்று வலிமை பெறுவோம். எல்லாக்காரியங்களையும் இறைவன் திட்டப்படி ஏற்றுக் கொள்வோம்.

சே. மேரிபத்மா
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர்

## இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்தவர் ...

தமது உறுதியான விசுவாசத்தினாலும், பக்தி முயற்சிகளினாலும், குடும்ப செபத்தினாலும் கிறிஸ்துவை தங்களில் சுமந்து வாழ்ந்த இலங்கைக் கிறிஸ்தவர்களை ஆன்மீக வழியில் நடத்திச் செல்ல இறைவன் வண. யோசெவாஸ் அடிகளாரை இலங்கைக்கு அனுப்பினார்.

கோவா நகரில் பிறந்த வாஸ் அடிகளாரின் இளமைக் கனவு இறையருளால் நிறைவேற, அவரோ துறவற குருவாக, மறைதூதுப் பணியாளராக, ஏழைகளின் அன்பனாக, கிறிஸ்துவுக்காக வாழும் அர்ப்பணிப்பாளராக ஆண்டவர் இயேசுவால் அழைக்கப்பட்டு, ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார். இலங்கையில் பணிபுரிய பேராவல் கொண்ட வாஸ் அடிகளார் தனது உதவியாளர் யோண் என்பருடன் பாய்க் கப்பலில் பயணமானார். புனித பவுலின் உரோமைப் பயணத்தை போல கடும் புயலினால் தாக்கப்பட்டு, பசியினாலும் நோயினாலும் துன்பப்பட்டு, உயிருக்குப் போராடி இறைவனால் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டார். ஒல்லாந்தரிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், கத்தோலிக்க கிறிஸ்தவர்களை இனங்கண்டு மறைவாக தனது பணியினை முன்னெடுத்துச் செல்லவும் எண்ணிய வாஸ் அடிகளார். தன்னை ஓர் பிச்சைக்கார ஏழையாக மாறுவேடப்படுத்தி அடையாளப்படுத்தினார். திருத்தூதர்களை பணிக்கனுப்பும் போது இயேசு அவர்களுக்குக் கூறிய வார்த்தைகளை (லூக் 9:1-6) மனத்திற் கொண்டு செயற்பட்டார். யாழ்ப்பாணத்தில் சில்லாலையூரை பாதுகாப்பாகக் கருதி அங்கிருந்த கிறிஸ்தவர்களை இனங்கண்டு அவர்களுடைய ஆன்மீகத் தேவைகளையும், அருட்சாதனங்களையும் நிறைவேற்றி, அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். எனினும் ஒல்லாந்த ஒற்றர்கள் அவரின் இருப்பிடத்தை அறிந்து கொண்டதை தெரிந்து கொண்ட வாஸ் அடிகளார், தனது இருப்பிடத்தை புத்தளத்திற்கு மாற்றி அங்கிருந்து கண்டி நகருக்குச் சென்று தனது இருப்பிடத்தையும், பணித்தளத்தையும் அமைத்துக் கொண்டார். இதனால் பௌத்த சிங்கள மக்கள் மத்தியிலும் திருச்சபை வளர்ந்து ஒளி வீசியது.

கண்டியில் காலத்துக்குக் காலம் பல சதிகளாலும், சூழ்ச்சிகளாலும் துன்பப்பட்டாலும் ஆவியானவர் அவரோடு செயற்பட்டதனால் வாஸ் அடிகளார் சற்றும் தளராமல் உறுதியோடு தன் பணி தொடர்ந்தார். அக்காலத்தில் கண்டி நகர் கடும் வரட்சியினால் பீடிக்கப்பட மக்கள் பஞ்சத்தில் துடித்த சந்தர்ப்பதில் தனது செபத்தின் மூலமாக அற்புத மழையை வரப்பண்ணினார். இதனால் அரசன் கண்களில் கருணை கிடைத்தது மட்டுமல்லாமல் பிற மதத்தவர்களும் திருச்சபையில் சேர்ந்து கொண்டார்கள். அத்தோடு தம் மனம்போன போக்கில் வாழ்ந்த கத்தோலிக்கர்களும் தம் பிழையுணர்ந்து திருந்தி வாழ்ந்தார்கள். வாஸ் அடிகளாரின் பணிக்காலத்தில் இலங்கையை பல கொள்ளை நோய்கள் தாக்கி பலரினதும் உயிரை அழித்தது. இக்காலத்தில் வாஸ் அடிகளார் தனது சக குருக்களுடன் சேர்ந்து ஆற்றிய பணி இன்றும் போற்றப்படுகிறது. தனது பணிக்காலத்தில் இலங்கை முழுவதையும் பல தடவைகள் கால்நடையாக வலம் வந்து கத்தோலிக்க விசுவாசிகளை ஊக்கப்படுத்தி, இறையன்பில் ஆழப்படுத்திய வாஸ் அடிகளாரின் அப்புத பணி இன்று வாழும் எம் எல்லோரையும் மிகவும் சிந்திக்க வைக்கிறது. கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு திருகோணமலை, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி, கண்டி என எல்லா இடங்களிலும் அவரது பாதங்கள் நடந்தன. இயேசுவை பறைசாற்றி, திருச்சபையை வலுப்படுத்தி ஏழை மக்களுக்கு வாழ்வைக் காட்டிய உத்தமர் என்றால் மிகையாகாது. ஒல்லாந்த ஆளவத்தால் அழிந்து கொண்டிருந்த இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்த பெருமை முத்திப்பேறு பெற்ற யோசெவ் வாஸ் அடிகளாரையே சாரும். அவருடைய செப வாழ்வு, கடின உழைப்பு, நற்பணி, இயேசுவுக்காக இயேசுவோடு வாழ்ந்த முறைகள் அனைத்தும் அன்றைய மக்களுக்கு மட்டுமல்ல இன்று நம்மெல்லோருக்கும் குறிப்பாக இறைப்பணிக்கென தங்களை அர்ப்பணித்து வாழும் இறை ஊழியர்களுக்கு ஒரு முன்னுதாரணமான வாழ்வு என்றால் மிகையாகாது. புனித பவுல் பிறவினத்தவரின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுவது போல முத். யோசெவ் வாஸ் அடிகளார் இலங்கையின் அப்போஸ்தலரே. அவர் (மத் 25. 34-37) இல் கூறப்படும் வலப்பக்கத்தில் உள்ள ஆண்டவருக்குரிய மக்களுடன் இருப்பார். அவரது வழியில் நாமும் சென்று இறைப்பணியாற்றி இறைவனோடு என்றென் றும் வாழ இன்றே புறப்படுவோம்.

## அவலம்

துப்பாக்கி குண்டுகள்
துயர கீதம் வாசித்து
மனித உயிரெடுத்து
விடை கொடுக்கிறது

தொட்டில் கயிறுகள்
அறுக்கப்படும் முன்பே
சவப்பெட்டி மூடிகள்
அறையப்படுகின்றன.

பிஞ்சுகள் துள்ளி திரிந்த
மண் - இப்போ
அஞ்சாமல் அவர்கள்
இரத்தத்தை குடிக்கிறது

அவர்களது இல்லங்களே
அவர்களுக்கு கல்லறைகளாய்
இப்போ.....!

ஆ. ஜெகீ, நவாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி வாழ்வில் 60 ஆண்டு நிறைவு காணும் மகிழ்ச்சியில் அருட்சகோதரி வில்லிஏசா அ.கா.



யாழ் மண்ணில் அப்போஸ்தலிக்க கார்மேல் பூங்காவில், முதல் பூத்த லில்லி மலரென்னும் பெருமையுடன், துறவற வாழ்வில் நல்லாசிரியராக - இறை தொண்டராக - பிறர் துயர் துடைக்கும் பணியாளராக, 60 ஆண்டுகள் பயணித்து, 'வைர விழாக்' காணும் அருட்சகோதரியின் பணி வாழ்வின் வரத்துக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, அருட்சகோதரிக்கு எமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவரது பணிப் பயணம் மேலும் பல்லாண்டு தொடர இறையருள் வேண்டி அன்புடன் வாழ்த்தும் -

08-01-2009

சகோதரர்கள் -

திரு. M.V வேதநாயகம் குடும்பத்தினர் - ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி - யாழ்ப்பாணம்.
திரு. M.S. தேவதாசன் குடும்பத்தினர் - ஓய்வு பெற்ற அதிபர், திருகோணமலை
Dr. M.S. அலோசியஸ் குடும்பத்தினர் - யாழ்ப்பாணம்.

பெறாமகள் -

திருமதி. ஜெயரோசா பேரானா குடும்பத்தினர் - ஆசிரியை சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

(Advt-03/09)

# சிரிப்பு வந்தா சிரியுங்க!

**நண்பன் 1 :** நேற்று நான் அமெரிக்க ஜனாதிபதியோடு போனில் பேசினேன்

**நண்பன் 2 :** அவர் என்ன சொன்னார்?

**நண்பன் 1 :** Sorry, றோங் நம்பர் என்டாரு.

★★★

**அமெரிக்கா :** நாம் தான் முதன் முதலில் சந்திரனில் கால் வைத்தோம்

**ரஷியா :** நாம் தான் முதன் முதலில் கிரகமொன்றில் கால் வைத்தோம்

**இலங்கை :** நாம் தான் முதன் முதலில் சூரியனில் கால் வைத்தோம்

**அமெரிக்கா :** அது எப்படி? முடியவே முடியாது. அது மிகவும் சூடானதே.

**இலங்கை :** அதனால்தான் நாம் இரவில் போய் கால் வைத்தோம்.

★★★

**கணவன் :** எனக்கு பசியே இல்லையாம்

**மனைவி :** டாக்டர் சொன்னாரா?

**கணவன் :** இல்லை. சாமக் கடைக்காரன் சொன்னான்.

★★★

**பஸ் நடத்துனர் :** எப்பவும் படியில் நிற்கிறியே. நீ என்ன வாசமான் ஆ?

**மாணவன் :** எப்பவும் சில்லறை கேட்கிறியே. நீ என்ன பிச்சைக்காரனா?

★★★

**ஆசிரியர் :** பிள்ளைகளே! நீங்கள் எல்லாரும் நல்லாப் படிச்சு நம்ம நாட்டுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்க வேண்டும். சரியா?

**மாணவன் :** ஏன் சேர், இப்ப இருக்கிற 'இலங்கை' என்ற பெயர் நல்ல பெயரில்லையா?

★★★

**அதிபர் :** டேய் எவன்டா தமிழ் ஆசிரியருடைய காலை வாரிவிட்டது?

**மாணவன் :** அவர்தான் சேர் நேற்று சொன்னவர், 'நாளை காலை வாருங்கள்' என்று.

-அருண் -

## நன்றி

திருமலைக் சிறுபிள்ளைக்கான ஆக்கங்கள் எழுதிய பல ஆக்கங்கள் தாமதமாகவே கிடைத்தன. அதனால் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துவதோடு தொடர்ந்தும் எழுதுங்கள்.

- ஆசிரியர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி 9ல் சரியான விடைகளை எழுதி குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டோர்

1 வது இடம் : ஜெ. கோபனா, உம் கட்டாரம், அல்லைப்பிட்டி.
2 வது இடம் : ம. அருள்விமலன், இல 60, கொழும்புத்துறை வீதி பாண்டியன் தாழ்வு.
3 வது இடம் : அ. அன்ரன் றோம், குருநகர்.

### மேலும் சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப் பெறுவோர்

1. அ. சூரியப்பிரியா, நாவாந்துறை.
2. ப. லதா, நாவாந்துறை.
3. மெ. ஜெஜிந்தினி, நாவாந்துறை.
4. பூ. டயானா, நாவாந்துறை.
5. சி. யான்சினி, நாவாந்துறை.
6. ம. கஜ்டன், பாண்டியன்தாழ்வு.
7. பி. டிமோசன், நாவாந்துறை.
8. ச. மேரிடயானா, நாவாந்துறை.
9. ~~வே. பிறின்ஸி, நாவாந்துறை.~~
10. சி. அருள்தேவா, நாவாந்துறை.
11. அ. பிரசாத், நாவாந்துறை.
12. செ. கிறிஸ்ரிமேரி, நாவாந்துறை.
13. அ. கிருசாந், நாவாந்துறை.
14. செ. அலெக்ஸ், நாவாந்துறை.
15. ய. டிசானி, நாவாந்துறை.
16. ம. மேரி சுஜந்தினி, நாவாந்துறை.
17. த. மேரிவதனா, அல்லைப்பிட்டி.
18. பி. ஜீன், நாவாந்துறை.
19. ம. மேரிகனிஸ்ரா, நாவாந்துறை.
20. அ. சாளினி, நாவாந்துறை.
21. செ. மேரி நிர்மலா, நாவாந்துறை.
22. ஜெ. ஜெமேன்கா, நாவாந்துறை.
23. செ. கிந்துஜன், நாவாந்துறை.
24. ச. டனிஸ்ரன், நாவாந்துறை.
25. வ. றதீஸ், நாவாந்துறை.
26. ச. டெனிக்சன், நாவாந்துறை.
27. ப. தக்சி, நாவாந்துறை.

குறிப்பு : பலையூர் பங்கிலிருந்து கிடைத்த விடைகள் தாமதமாக வந்ததால் போட்டியில் சேர்த்துக் கொள்ள முடியவில்லை.

## வெள்ளிவிழா நாயகியை வாழ்த்துகிறோம்



மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தைச் சேர்ந்தவரும், நல்லாயன் சபை துறவியுமாகிய அருட்சகோதரி மேரி றஞ்சனா அவர்கள் தனது துறவற வாழ்வின் 25வது ஆண்டு நிறைவை நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுத்து தன் குடும்பத்தாரோடும், பங்குமக்களோடும் நினைவு கூர்ந்தார். அருட்சகோதரியை இறையாசீர் பெற்று பணியாற்ற வாழ்த்துகிறோம்.

## சேர். சிற்றம்பலம் கார்டினர் வள்ளலின் 110வது பிறந்ததின நினைவு



அச்சுவேலி நகரில் 19ம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து தனது சமூகத்திற்கும் யாழ் மறைமாவட்ட திருச்சபைக்கும் தனது தியாகத்தாலும் வள்ளல் தன்மையாலும் அரும்பணியாற்றிய சேர். சிற்றம்பலம் கார்டினர் அவர்களின் 110வது பிறந்ததினம் 06.01.2009ல் நினைவு கூரப்பட்டது. அன்னாரை எம் நெஞ்சிலிருத்தி இறைவனின் பேரின்ப வீட்டில் இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுவோமாக!

ஏ.எம். இராசேந்திரம்.
இளைப்பாறிய அதிபர், அச்சுவேலி.

## யாழ் மறைமாவட்டத்தில் புதிய நியமனங்கள்

யாழ் மறைமாவட்டத்தின் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தின் புதிய அதிபராக அருட்பணி. சகாயம் கொலின்ஸ் அடிகளார் பொறுப்பேற்றுள்ளார்.

அத்துடன் அருட்பணி. நிருபன் நிர்மலநாதன் அடிகளார் பங்குத்தந்தையாகவும் அருட்பணி. லோசன் அன்ரனி மண்டைதீவு பங்குத்தந்தையாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் புதிய பணிகள் சிறக்க பாதுகாவலன் சார்பில் வாழ்த்துகிறோம்.

## 1ம் வருட நினைவஞ்சலி



திருமதி.
கயித்தாம்பிள்ளை
செபமாலையம்மா

31-01-09 ஒரு வருட ஞாபகம்
நினைவு கூருகிறோம்
என்றும் உங்கள் பாசம் மறவோம்
"அம்மா"

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 31-01-2009 சனிக்கிழமை இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்.
(கனடா)

P.P பீரிஸ் குடும்பம்
இல. 10, 3ம் குறுக்கு,
பாசையூர், யாழ்ப்பாணம்.

Advt-03/09

## விண்ணக வாழ்வின் 3ம் வருட நினைவஞ்சலி

மண்ணுலகில் 13 . 06 . 1913



விண்ணுலகில் 15 . 01 . 2006

அமரர். மருத்தீன் அந்தோனி பர்னாந்து
(பொன்னுத்தம்பி)

"ஆண்டவரின் இல்லத்தில் நான் வாழ்நாள் எல்லாம் குடியிருக்க வேண்டும்" (சங் 27,4)

அன்பும் பண்பும் தியாகமும் நிறைந்த உங்கள் வாழ்வு என்றும் எம்மனங்களில் நீங்கா நினைவுகளாய் இருக்கும்.

326, பிரதானவீதி யாழ்ப்பாணம் (மண்டைதீவு - 1)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Advt-04/09

## மாறுமோ இவ்விதி


ஏக்கத்தை சுமந்த மனது
தூக்கத்தை மறந்த கண்கள்
வார்த்தையை மறுத்த உதடுகள்
தாக்கத்தைத் தருகின்ற யுத்தங்கள்
ஊனத்தைத் தருகின்ற குண்டுகள்
உறவுகள் தொலைகின்ற தருணங்கள்
கவலைகள் தருகின்ற காயங்கள்
இழப்புக்கள் வருகின்ற அனர்த்தங்கள்
என்றுதான் மாறுமோ இவ்விதி
எம் இறைவா வழிதனை
மாற்றாயோ
இந்த உலகிலே.

அ. ஜெனிலா,
அல்லைப்பிட்டி - 2

★★★★★★★

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1927 - 09 - 13



இறப்பு 2008 - 12 - 13

திரு. மனுவேற்பிள்ளை வேதநாயகம்
(இளைப்பாறிய உத்தியோகத்தர் கல்வித் திணைக்களம், நல்லூர். திருகோணமலை)

"உமது அன்பில் துயில் கொண்டவர்களும் பேறுபெற்றோர்" சீராக் - 48:11

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12/14 பண்டாரநாயக்க மாவத்தை,
பதுளை.

Advt-01/09

## 45ம் நாள் நினைவு

தோற்றம் 1935 . 09 . 12

மறைவு 2008 . 12 . 05

சின்னையா ஞானரஞ்சிதம்

சீவியத்திலும் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்

பிரிவால் துயருறும்
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

ஆனைப்பந்தி கோவில் கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

Advt-02/09

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 11 . 04 . 1937



விண்ணுலகில் 03 . 02 . 2002

அமரர். பத்திநாதர் அருளானந்தம்

"ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு" (தி.பா. 27:1)

விண்ணில் வாழும் இறைவா! எம் அன்புத்தந்தை வழியாக நீர் செய்த நன்மைத்தனங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். உமது அளவு கடந்த அன்பினால் அவரது ஆன்மாவுக்கு ஆறுதல் அளித்து இன்ப வான்வீட்டில் இடமளித்திட வேண்டுகின்றோம். ஆமென்.

குருநகர், பருத்தித்துறை. Advt-05/09 குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பித்தல் திட்டம் - 2009

**"இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்"**

**யாழ் மறைமாவட்ட ஐந்தாண்டு புதுப்பித்தல் திட்டம் மூன்றாம் ஆண்டு.**

மையப் பொருள் :- "இயேசுவில் இணைந்த திருச்சபையாக பிறரன் புப் பணி செய்வோம்"

மகுடவாக்கு :- அடுத்திருப்பவரை அன்பு செய்வாயாக.

இலக்கு :- தலத்திருச்சபையின் அனைத்து மட்டங்களிலும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் பிறரன்புச் செயற்பாடுகளை அதி கரிப்பதும்.

## மறைமாவட்ட பல்வேறு ஆணையங்களுக்கான செயற்பாட்டு முன் மொழிவுகள்

* சமூக விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்துதல்.
* சமூக பகுப்பாய்வில் ஈடுபட்டு முழவுகளை முன்வைத்தல்.
* திருச்சபையின் சமூகப் போதனைகளை பரப்புதல்.
* மேற்படி கருத்துக்களுக்கு அமைவாக ஒலி, ஒளி பேழைகள் வெளியிடல்.
* துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் வெளியிடல்.
* மையப் பொருளுக்கேற்ற மறை யுரைக் குறிப்புக்கள், குழு வழிபாடு களை தயாரித்து வழங்குதல்.
* தெரிவு செய்யப்பட்ட சமூகப் பிரச் சனைகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
* அவற்றை மாற்றியமைக்க பொதுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், ஒழுங்கமைத்தல்.
* குடும்பங்களை சமூகத்தை நோக்கித் திரும்பும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* மறைக்கல்வி மாணவருக்கு சமூக ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகுப்புக் களை தயாரித்து நடத்துதல்.
* பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தலும், மாணவர் பகிர்வுக் குழுக்களை அமைத்தலும்.
* பக்திச் சபைகள், ஆலய அருட்பணிச சபைகளுக்கு சமூக விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

# திருப்பாலத்துப சபை தினம் 25-01-2009

## இறைவார்த்தையினால் ஊட்டம்பெற்று உலகிற்கு ஒளியாவோம்



அன்பான பிள்ளைகளே நாம் மீண்டும் புதிய வருடத்தை ஆரம் பித்துள்ளோம் இப்புதிய ஆண்டு இறைவன் எமக்கு தந்த ஒரு கொடையாகும் . புதிய வருடத்தில் புது வாழ்வு வாழ இயேசு எம்மை அழைக்கிறார். இயேசு இவ்வுலகில் சாதாரண மனிதராக பிறந்தார். தமது பெற்றோருக்கு அமைந்து நடந்தார். அவர் ஞானத்திலும் உடல் வளர்ச் சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனி தருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

இன்று தொடர்பு சாதனங்கள் எம்மை திசை திருப்பி இறைவார்த்தை மட்டில் எமக்குள்ள ஆர்வத்தை குறைத்துவிட முயலுகின்றது. எமது வாழ்வில் அக்கறையற்ற தன்மையை உருவாக்குகின்றது.

இறைவார்த்தையை படித்து அதன்படி வாழ்வதுதான் எமக்கு ரிய தன்மை அல்லது அடையாளம் ஆகும். நாம் தனியாகவும் குழுவாக வும் படித்து விளங்கி பகிர்ந்து செபிப் பதனால் வாழ்வு பெற முடியும் இறை வார்த்தைப் படிப்பின் நோக்கம் அதை செயல்படுத்துவதற்காக, வாழ்ந்து காட்டுவதற்காக. இது எம்மை வாழ்க்கை பகிர்வுக்கு அழைதது்ச் செல்லவேண்டும். மரியா ஆண்டவரின் காலடி அருகில் அமர்ந்து அவர் சொன்னதை கேட்டார். அதேபோல நாமும் அவருடன் இருந்து வார்த் தையை கேட்டு வாழ்வாக்குவோம்.

துன்புறும் எமது உறவுகள் நாளாந்தம அனுபவிக்கிற துன்பங் களில் இருந்து விடுதலை பெற்று வாழ தினமும் அவர்களுக்காக செபிப்போம் .அத்துடன் அவர்களுக்கு எங்களால் இயன்ற சிறு உதவிகளை வழங்கு வதன் மூலம் அவர்களுக்கு உதவி வழங்குவோம்.

திருப்பாலர் சபை தினத்தை நினைவு கூறும் வேளையில் விசுவா சம், செபம், பகிர்தலில் நாளுக்கு நாள் வளரவும் இறைவார்த்தையை வாழ்வாக்கி உலகிற்த ஒளியாவோம்

அருட்பணி. ஆ . ப . அன்ரனிப்பிள்ளை
இயக்குனர்.
திருப்பாலர் சபை . யாழ் மாவட்டம்.

# அடுத்தவனுக்காக நான் என்னையே கொடுக்கும் இரத்தக் கொடை



**சாவகச்சேரி புனித லிகோரியார் இளைஞர் மன்றத்தினரால் கடந்த 04.01.2009 ல் இரத்தக்கொடை நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் சுமார் 40 பேர் இரத்தக்கொடை வழங்கினார்கள்.**

# கிளாரட் சிறுவர் கதம்பத்தின் ஒன்று கூடல் - 2008

கிளாரட் சிறுவர் கதம்பத்தின் ஒன்று கூடல் 20 .12 . 2008 அன்று கலைத்தூது கலையகத்தில் அருட் தந்தை அ. ஜோ. அருள்ராஜா அவர்களின் தலைமையில் காலை 8.00 –மாலை 3.30 வரை இடம் பெற்றது. இவ் ஒன்று கூடலில் நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி என்பன நடைபெற் றது. இவற்றில் 300 இற்கு அதிக மான மாணவர்கள் பல்வேறு பங் குத் தளங்களில் இருந்து வருகை தந்தனர்.

நாடகப்போட்டிக்கு பெரியவிளான், மல்லாகம்,பண்டத்தரிப்பு, மணற் காடு, மானிப்பாய், கரவெட்டி, உடு வில் ஆகிய பங்குகளும் பாட்டுப் போட்டிக்கு நாவாந்துறை, பாசை யூர்,சில்லாலை, சுன்னாகம், குள மண்கால், யாழ் அடைக்கல அன்னை ஆலயம்(O.L.R)ஆகிய பங்குகளும் பேச்சுப்போட்டிக்கு குருநகர், உடு வில், சில்லாலை, யாழ் அடைக்கல அன்னை ஆலயம், கரவெட்டி, சுன் னாகம், மானிப்பாய், அஞ்சனந் தாழ்வு, பண்டத்தரிப்பு, பாசையூர், மல்லாகம், கொய்யாத்தோட்டம, பெரியவிளான் , நாவாந்துறை ஆகிய பங்குகளும் தமது ஆற்றல்கள் திற மைகளை வெளிக்கொணர வருகை தந்தனர் . போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு :-

**1. நாடகப் போட்டி**

**1ம் இடம்** - மானிப்பாய்
**2ம் இடம்** - குருநகர்
**3ம் இடம்** - மல்லாகம்

**2. பாட்டுப் போட்டி**

1ம் இடம் - கரவெட்டி
2ம் இடம் - நாவாந்துறை
3ம் இடம் - பாசையூர்

**3. பேச்சுப் போட்டி**

**1ம் இடம்** - பெரிய விளான்
**2ம் இடம்** - பாசையூர்
**3ம் இடம்** - யாழ் அடைக்கல அன்னை

இப்போட்டிக்கான பரிசளிப்பு வைபவமும் "துளிகள் "நூல் வெளியடும் மதியம் 2 மணிக்கு ஆரம்பமாகியது. இவ் வைபவத்தின் பிரதம அதிதியாக அதி வந்த னைக்குரிய கமிலஸ் நிமலன் ஜோண்பிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்தார். துளிகள் நூலானது கிளாரட் சிறுவர் கதம்பத்தின் மாண வர்களது தனிப்பட்ட ஆக்கங்களை தொகுத்து அச்சமைக்கப்பட்டது. இந்நூலின் அறிமுகத்தினை திருமதி ரவீந்திரன் கௌதினி அவர்கள் வழங்கினார். பின் பிரதம விருந் தினிற்கு கிளரட் சிறுவர் கதம்ப இயக் குனரால் முதல் நூல் வழங்கப்பட் டது. பலரும் இது போன்ற நிகழ்வுகள் தொடர வேண்டும் என தமது ஆவலை தெரிவித்தனர்.


# யாழ் மறைமாவட்ட ஆணையங்களும் அவற்றின் இயக்குனர்களும்

1. **விவிலிய மறைக்கல்வி ஆணையம்**
   அருட்பணி. எஸ். அன்ரன் ஜோர்ஜ்
2. **கல்வி ஆணையம்**
   அருட்பணி. ஜே. ஏ. யேசுதாஸ்
3. **குடும்ப அப்போஸ்தலத்துவ ஆணையம்**
   அருட்பணி. எஸ். ஜே. இராஜநாயகம்
4. **மனித முன்னேற்ற ஆணையம்**
   அருட்பணி. சீ. ஜி. ஜெயக்குமார்
5. **நீதி சமாதான ஆணையம்**
   அருட்பணி. ஏ. எப். எக்ஸ். ஜெயசேகரம்
6. **திருவழிபாடு, கலாச்சார ஆணையம்**
   அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா
7. **கிறிஸ்தவ ஒன்றிப்பு, சர்வமத உரையாடல் ஆணையம்**
   அருட்பணி. ஏ. பி. திருமகன்
8. **குருக்கள், துறவிகள் ஆணையம்**
   அருட்பணி. அ.யோ. அருள்ராஜ். CMF
9. **சமுகத் தொடர்பு ஆணையம்**
   அருட்பணி. போல் றொகான்
10. **பொதுநிலையினர், இளையோர், அன்பிய ஆணையம்**
    அருட்பணி. எம். வி. இ. இரவிச்சந்திரன்
11. **நற்செய்தி அறிவிப்பு ஆணையம்**
    அருட்பணி. ஏ. பி. அன்ரனிப்பிள்ளை

# செபமாலைத்தாசர் சபையின் 80வது ஆண்டு நிறைவு

## நிறுவுனர் வண. தோமஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் 45வது நினைவு நாள்

## 26.01.1964–26.01.2009



தமது சபையின் 80வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் செபமாலைத்தாசர் சபையினர் தங்களுடைய சபையின் நிறுவுன ராகிய வண. தோமஸ் அடிகளா ரின் விண்ணக வாழ்வின் 45வது நினைவு நாளையும் வருகிற 26ம் திகதி அனுசரிக்கின்றார்கள்.

வண. தோமஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது இன்று கிளைவிட்டு இந்தியாவில் ஏழு மறைமாவட்டங்களிலும், இலங் கையில் நான்கு மறைமாவட்டங் களிலுமாக பதின்மூன்று இல்லங் களில் பணிபுரிந்து வருகின்றது. அத்துடன் செபமாலைக் கன்னி யருக்குகென்று இலங்கையிலும் இந்தியாவிலும் 11 இல்லங்களும் காணப்படுகின்றன. இவ்வாறாக செபமாலைதாசர் சபையானது இன்று இறைவனால் ஆசீர்வதிக் கப்பட காரணமாய் இருந்தவர் எமது நிறுவுனர் அருட்தந்தை தோமஸ் அ .ம .தி ஆவார். இவரது புனிதப் பட்டத்திற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் வேளை யில் இறைமக்களாகிய நாம் அவரது புனிதப்பட்ட முயற்சி வெற்றியாகவும் செபமாலை தாசர் சபைக்கு ஓர் புனிதரைத் தர வேண்டும் என்று தினந்தோறும் ஜெபிப்போம். இத்தோடு " கடவு ளுக்கு நிகர் யார்?" "Who is like unto God?" என்ற தோமஸ் அ.ம.தியின் விருதுவாக்கை எம் வாழ்வில் கொண்டு இறைவனுக்கு ஊழியம் புரிந்து ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவோம்.

**அன்புடன்**

**G. நிமல்ஜன், அருள் ஆச்சிரமம்**

# கரவலூரில் யூபிலி நாயகனுக்கு வரவேற்பு



தனது குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழாவை நிறைவுசெய்யும் அருட்திரு மொன்சின்யோர் யோ. கமிலஸ் நிமலன் அடிகள் அண்மை யில் தான் பணிபுரியும் உரோமா புரியிலிருந்து யாழ் மறைமாவட்டத் திற்கு வருகைதந்தபோது, அவரு டைய சொந்த இடமாகிய காவ லூர் புனித. மரியாள் ஆலயத்தில் [illegible] வரவேற்பளிக்கப்பட்டது. பங்குத் தந்தை அருட்பணி. ஜேம்ஸ் அடிக ளாரால் ஒழுங்குசெய்யப்பட்ட இந் நிகழ்வில் வெள்ளிவிழா நாயகன் பாண்ட் வாத்திய இசையோடு வர வேற்கப்பட்டு ஆலயத்துக்கு அழைத் துச்செல்லப்பட்டு நன்றித் திருப்பலி யும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவை தவிர யாழ் ஆயர் இல்லம். கொழும்புத்துறை புனித. சவேரியார் குருத்துவக்கல்லூரி, பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயம், போன்ற இடங்களிலும், கொழும்பில் தனது உறவினர்க ளோடும், திருத்தந்தையின் பிரதிநிதி மற்றும் ஆயர்கள் குருக்கள் துறவிகளோடும் இணைந்து புனித. லூசியா பேராலயத்திலும் அடிக ளார் நன்றித் திருப்பலிகளும் ஒப்புக் கொடுத்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையா[illegible]810, [illegible] அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2008 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org